178.

കുല ഭിഷഗ്വരൻ.

ലക്കം-1 പുസ്തകം-10

ജൂ-1928

JL
J684m211,N27
N28.1.10
159611

11 APR 1928
MADRAS

# ஏல விவசாயி. 178

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து
வெளிவரும் ஓர் மாதப் பத்திரிகை.

ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?
(பாரதியார்)

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.

மலர் 1 | உத்தமபாளயம். பிரபவ ஸ்ரீ தைமீ
1928ஸ்ரீ ஜனவரி-பிப்ரவரிமீ | இதழ் 10

ஊரனந்தம் பெற்ற பேரனந் தஞ்சுற்று
முறவனந் தம்வினையினு
முடலனந் தஞ்செயும் வினையனந் தங்கருத்
தோவனந் தம்பெற்றபேர்
சீரனந் தஞ்சொர்க்க நரகமு மனந்தநற்
றெய்வமு மனந்தபேதந்
திகழ்கின்ற சமயமு மனந்தமத னால்ஞான
சிற்சத்தி யாலுணர்ந்து
காரணந் தங்கோடி வருஷித்த தெனவன்பர்
கண்ணும் விண்ணுந் தேக்கவே
கருதரிய வானந்த மழைபொழியு முகிலைநங்
கடவுளைத் துரியவடிவைப்
பேரனந் தம்பேசி மறையனந் தஞ்சொலும்
பெரியமௌ னத்தின் வைப்பைப்
பேசரு மனந்தபத ஞானவா னந்தமாம்
பெரியபொரு ளைப்பணிகுவாம்.

159611



# திருவாங்கூர் சட்டசபை.

நாம் திருவாங்கூர் சமஸ்தானக் குடிகளாயிருந்தும், திருவாங்கூர் சர்க்காருக்கு லட்ச லட்சமாக வரி வாரிக்கொடுத்தும், அச் சமஸ்தானத்தில் ஏற்பட்டிருக்கும் சாதனங்களைச் சரியாய் அடையமுடியாமல் அவதிப்படுகிறோம்; அவைகளை அடையவும் தீவிரமுயற்சி செய்யாமலிருக்கிறோம். திருவாங்கூர்வாசிகள் அனுபவிக்கும் சகல உரிமைகளும் நமக்கும் உண்டு என்பதை ஒவ்வொரு ஏல விவசாயியும் உணரவேண்டும். உரிமையில்லாவிட்டால் உரிமைக்காகப் பாடுபடவேண்டும். ஏல விவசாயிகளின் மக்களில் யாருக்கேனும் சர்க்காரில் உத்தியோகம் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா? நமது நோக்கம் உத்தியோக வேட்டையன்று. நாம புறக்கணிக்கப்படுகிறோம் என்பதை இதன் மூலமாக அறிவிக்கிறேன். சர்க்காரால் துன்பங்கள்தான் நமக்குக் கிடைக்கின்றனவேயன்றி, இன்பங்கள் இதுவரையில் நமக்குக் கிடைக்கவில்லை. இவைகளைப்பற்றி நாம் கடுகத்தனையும் கவனிக்காமலிருக்கிறோம்.

ரெவின்யூ, பாரஸ்ட், ஆப்காரி முதலிய டிபார்ட்மெண்டுகளின் தொந்திரவுகளை நீக்கும பொருட்டு நமது மகாநாடுகளில் வருத்தத்துடன் பேசிக் காகிதத்தில் தீர்மானம் செய்துவிட்டு, அத்துடன் அவைகளைப்பற்றி அடியோடு கவனிக்காமலிருக்கிறோம். நம் சங்கம் உண்டான காலமுதல் இதுவரைக்கும் சர்க்கார் சம்பந்தமான தீர்மானங்களையும் அவைகளின் முடிவுகளையும் கவனித்துப்பார்த்தால், ஒவ்வொருவருக்கும் விஷயங்கள் நன்றாய்த் தெரியும். திவான் கனம் V. P. மாதவராவ் அவர்கள் காலத்தில்



ஏலத் தோட்டங்களுக்குக் கிஸ்தியைக் குறைத்ததைத் தவிர்த்து, இதுவரையில் நாம் திருவாங்கூர் சர்க்காரால் என்ன நன்மைகள் அடைந்திருக்கிறோம்? ஒன்றுமில்லை, பலவிதமான தொந்திரவுகள்தான் அதிகரித்திருக்கின்றனவென்று திட்டமாய்ச்சொல்லலாம்.

யானை, புலி, காடி, காட்டெருமை முதலிய துஷ்ட மிருகங்கள் வாழும் மலைகளில் நமக்குச் சொந்தப் பாது காப்பிற்காகவுங்கூடத் துப்பாக்கி வைத்திருக்க முடியாது. அனுமதி வேண்டும். லைசென்ஸ் வாங்கிக்கொள்ளலாமென்றாலோ பெரும் வேலையாயிருக்கிறது; பிரமப்பிரயத்தனம் செய்தாலும் எல்லோருக்கும் கிட்டுவதில்லை. இதைப்பற்றித் தனியாகக் கட்டுரையொன்று விரிவாக வியக்தமாக அவசியம் எழுதத்தான் வேண்டியிருக்கிறது. சமயம் வரும்பொழுது எழுதப்படும். இன்னும் எத்தனையோ வகை இடைஞ்சல்கள், இன்னல்கள்!

ஏல விவசாயிகள் கணக்கற்று வரிக்கொடுத்தும், தேவிகுளம் டிவிஷனில் ஏல விவசாயிகள் ஏராளமாக இருந்தும் சர்க்காரால் நாம் கவனிக்கப்படவில்லை, நாம் பிரிட்டிஷில் வாழுகின்றோமாதலால், சரியாய் நாம் கவனிக்கப்படவில்லையென்று நினைத்து விடவேண்டாம். சுற்று ஜில்லாக்களிலிருந்து மைசூர் சமஸ்தானத்தில் கிருஷி செய்பவர்களுக்கு வேண்டிய வசதிகள் மைசூர் சர்க்கார் செய்திருக்கிறார்கள். நமக்கோ? காரணம்: நாம் வேண்டியபடி கிளர்ச்சிகளும், முயற்சிகளும் செய்யவில்லை என்று வெளிப்படையாய்ச் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. "அழுகிற பிள்ளைக்குத்தான் பால் கிடைக்கும்" என்பது நாட்டுப் பழஞ்சொல். நாம் நன்கு வேலைசெய்தால்தான் நல்லபலனை எதிர்பார்க்கலாம். இது வரையில் நமது உரிமைக்காக நாம் தக்கவாறு சர்க்காருடன் போராடவில்லை. நமக்குவேண்டும் உரிமைகளைப்பெற நாம் தகுதியுடையவர்களெனக் காட்டி, உரிமைகளைப்பெற ஒற்றுமையுடன் நமது போராட்டத்தைத் தொடங்கவேண்டும்.

திருவாங்கூர் சட்டசபையில் நம் பிரதிநிதித்துவத்தையடைய தீவிரமாக வேலைசெய்ய நமது சங்கம் முன்வரல் வேண்டும். இன்றொரு குறுக்கு வழியில் சென்றால், இன்னொரு அங்கமும் நாம் சட்டசபையில் அடையலாம். அதற்காக ஏல விவசாயிகள் அனைவரும் ஒன்றுபடல் வேண்டும்; வேலையும் செய்யவேண்டும். அடுத்துவரும் திருவாங்கூர் சட்டசபை தேர்தலில் நம்மில் தக்க ஒருவரை அபேட்சகராக நிற்கும்படிசெய்து, எல்லோரும் அவருக்கே ஓட் செய்யவேண்டும். இன்னொருவருக்கே ஓட் செய்யவேண்டுமெனத் தீர்மானம் ஒன்றும் தலைமைச் சங்கத்தில் நிறைவேற்ற வேண்டும். இதில் இவ்வாறு செய்யின் நிச்சயமாகவே சித்தி பெறலாம். இவ்வாறு இருவகைகளில் வேலைசெய்தால் இரண்டு இடங்கள் சட்டசபையில் தவறாது கிடைக்கும்.

ஏல விவசாயிகளில் சரியான ஒருவர் சட்ட சபையில் இருக்கும் காலத்தில்தான் ஏல விவசாயிகளின் தொனி சர்க்காருக்குச் சரியாகவும் சமஸ்தானத்துக்கு முற்றிலும் கேட்கும். ஆதலால் அடுத்துவரும் தேர்தல் காலத்தை எதிர் நோக்கிக் கொண்டிருங்கள். முதலில் வேலை முடிவில் வெற்றி. வேலைசெய்தால் "ஜெயமுண்டு பயமில்லை".

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

---



## ஏல விவசாயிகளுக்கு ஓர் செய்தி.

கடந்த வருடத்தில் தேவாரம், கோம்பை, ராஜா சங்க ஏல விவசாயிகளின் அரிய பெரிய முயற்சியின் பேரில் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கும் பிரஸ்தாபக் கம்பெனியின் பிரதான நோக்கமென்ன வென்பதைக் கவனிக்காத ஏல விவசாயிகளிற் சிலர், விவசாயிகளுக்கு வியாபாரம் எதற்கென்று கேள்வி போடுவதோடு நில்லாமல் கம்பெனியைக் கலைத்து விடவும் சூழ்ச்சிகள் செய்வதாகத் தெரிய வருகிறது. பிரஸ்தாபக் கம்பெனியானது ஏல விவசாயிகளாகவுள்ள சமஸ்தரையும் பங்காளிகளாக்கி, அரிய பெரிய பிரயாசையின் பேரில் சேகரிக்கும் ஏலச் சரக்குகளுக்கு நல்ல விலை கிடைக்கும்படி செய்யவேண்டுமென்ற நன்நோக்கத்தோடு ஸ்தாபகஞ்செய்யப் பெற்றிருக்கிறதே யொழிய சுயலாபத்தை விரும்பிப் பொது ஜனங்களை ஏமாற்றிப், பாவனைகாட்டி, இல்லாத பொல்லாத வார்த்தைகளைச் சொல்லித்திரியும் மோசக்கார வியாபாரத் தோரணையில் ஆரம்பிக்கவில்லையென்று நிச்சயமாக எல்லா ஏல விவசாயிகளுக்கும் தெரியப்படுத்திக் கொள்கிறோம். தவிரவும், கூட்டுறவு வியாபாரந்தான் சிறந்த முறையென்று கார்த்திகை-மார்கழி மாசத்திய நமது ஏல விவசாயிப் பத்திரிகையில் ஸ்ரீமான் என். வேங்கடரமணன் என்பார் எழுதியிருக்கும் வியாசத்தை ஒவ்வொரு ஏல விவசாயிகளும் கவனித்துப் பார்த்தால், விவசாயிகளுக்கு வியாபாரம் எதற்கு என்ற கேள்விக்குத்தக்க பதிலை யறிந்துகொள்வதோடு, இக் கம்பெனியில் ஒவ்வொரு ஏல விவசாயியும் பங்காளியானலொழிய நல்ல லாபத்தையடைய முடியாதென்பதையும் கண்டு கொள்ளலாம்.

ஏல விவசாயிகளே! உங்களுடைய நன்மையைநாடி பிரஸ்தாபக் கம்பெனி ஸ்தாபிக்கப் பெற்றிருக்கிறபடியால், சுயநலத்தை நாடிப் பேசும் போலியாட்களின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து, ஏமாந்து போகவேண்டாம். மறந்து செத்தால் உயிர் திரும்ப வராது இந்தச் சமயத்தில் நீங்கள் கண்விழித்துக் கம்பெனியில் பங்காளிகளாகிக் கொள்ளுங்கள். நல்ல லாபத்தையும், புகழையும் தனதாக்கிக் கொள்ளுங்கள். "ஒன்றே செய்யினு மொன்றேசெய் அன்றே செய்யினும் நன்றேசெய்" என்னுமான்றோர் வாக்கிற் கிணங்க, ஏல விவசாயிகளின் சந்ததிக்கு நன்மை பயக்கத்தக்க பிரஸ்தாபக் கம்பெனியில் எல்லா ஏல விவசாயிகளும் இன்றே பங்காளிகளாகச் சேர்ந்துகொள்ள வேண்டியதாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

உ. ம. சே. முகியித்தின்பிள்ளை ராவுத்தர்,
மானேஜிங் டைரேக்டர்,
T. C. P. A. Y. S. V. Co. (Ltd) Kombay.

---



## கைத்தொழில் வர்த்தக மகாநாடு,

### சென்னை.

### கனம் சர். இப்ராஹிம் ரஹிம் துல்லா அவர்களின் அக்ராசனப் பிரசங்கம்.

கைத்தொழில், வர்த்தக அபிவிருத்தியைக்கருதித் தாங்கள் சங்கங்களமைத்துக் கொண்டிருப்பதற்கு இந்தச் சந்தர்ப்பத்தில் தங்களைப் பாராட்ட விரும்புகின்றேன். சமீப காலம் வரை வர்த்தகர்கள் தங்களது சொந்த வேலைகளில் மாத்திரம் கவனம் செலுத்தி வந்தனர், கைத்தொழில், வர்த்தகம் முதலியவைகள் பெருகி, நாட்டின் செல்வாதார நிலைமை அபிவிருத்தியடைய வேண்டுமானால், இதுபோன்ற சங்கங்கள் அவசியமானவை யென்பதை சமீபகாலத்தில்தான் உணர்ந்தோம். ஆனால் ஒவ்வொரு ஜில்லாவிலும், நகரங்களிலும் கிளைச்சபைகள் ஏற்படவேண்டிய தவசியம். ராஜீய நிர்வாகத்துக்கு மாகாண வாரியாகப் பிரிக்கப் பட்டிருப்பதைப்போல் வர்த்தக விஷயத்தில் செய்யமுடியாது. ஏனென்றால் இந்தியாவின் செல்வாதார நிலைமை எல்லா மாகாணங்களுக்கும் பொதுவானதாகும்.

### ஆங்கிலக் கைத்தொழில்

ஐரோப்பாவில் யந்திரத் தொழிலாரம்பமான காலத்தில் எல்லா நாடுகளும் நெப்போலிய யுத்தத்தில் ஈடுபட்டிருந்தன. இங்கிலாந்து ஒரு தீவாக இருந்தபடியால், உள் நாட்டில் கைத் தொழில்கள் நடந்து வந்தன. யுத்தம் நின்றவுடன் மற்ற நாடுகளுக்குச் சாமான்கள் விற்றுவந்தார்கள். இதர நாட்டார்களும் அபிவிருத்தி யடைந்தனர். இங்கிலாந்துக்கு ஒரு பெரிய ஏகாதி

பத்தியமிருந்ததால் சாமான்களை விற்பதற்கு இடமிருந்தது. ஜெர்மனி தனது சாமான்களை விற்க முடியாததுதான் சென்ற ஐரோப்பிய யுத்தத்துக்கு ஒரு முக்கிய காரணம். இங்கிலாந்து உயர்ந்த சாமான்களைத் தயார்செய்து கூடுதல்-விலைக்கு விற்று வந்ததால் யுத்தத்துக்குப் பின் வாங்குவாரற்று, வேலையில்லாத் திண்டாட்டம் இங்கிலாந்தில் பெருகலாயிற்று.

இந்தியாவின் நிலைமையை எடுத்துக் கொள்வோமானால், இந்நாட்டின் கைத்தொழிலைக் காப்பாற்றும் அதிகாரம் இங்கிலாந்தின் கைவசமிருக்கிறது. இங்கிலாந்திலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காக இனமாற்று விகிதத்தை உயர்த்தி யிருக்கிறார்கள். இந்தியா தங்களிடம் கடவுளால் ஒப்புவிக்கப்பட்ட சொத்து என்று சொல்லுகிறார்கள். ஆனால் அந்த டிரஸ்டிகள் தங்களது நன்மைக்காக இங்கே இருக்கிறார்களே யல்லாது இந்தியாவின் நன்மைக்காகவல்ல. 1917ல் பொக்கிஷ மந்திரியாக இருந்தவர், வில்லியம் மேயர் சட்டசபையில் பதிலளிக்கையில், வருஷத்துக்குப் பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் முப்பதினாயிரம் வரை வருமான முள்ளவர்கள் 11. 378 பேர்கள் என்றும், 30 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் 2,336 பேர்களென்றும் சொன்னார். 32 கோடி ஜனங்களில் இவ்வளவு பேர்கள் தான் சுமாரான வருமான முள்ளவர்கள். இதுதான் இந்த "தெய்வீக தர்ம கர்த்தர்கள்" நமது நாட்டை அபிவிருத்தி செய்திருப்பது!

கிழக்கு இந்தியா கம்பெனியார் முன் தர்ம கர்த்தர்களாக இருந்து வந்தார்கள். அந்த டைரெக்டர் போர்டுக்கும் தற்காலமுள்ள இந்திய மந்திரி சபைக்கும் யாதொரு வித்தியாசமும் கிடையாது. பார்லிமெண்டோ வியாபாரிகளின் சபை. அவர்கள் தங்களது நன்மைக்காக இந்தியாவை ஆளுகிறார்களே யொழிய இந்தியாவின் நன்மைக்காகவல்ல. இந்தியாவின் மீது ஏராளமான வரிச் சுமையைச் சுமத்திவைத்தார், கூடியவரை தன் நாட்டில் உற்பத்தியாகும் எல்லாப் பொருள்களையும் விற்பதுவுமே அவர்களது நோக்கம். ஏகாதிபத்தியத்திலுள்ள வேறெந்த நாடும் ஒப்புக்



கொள்ளா மறுத்த தாராள வியாபார நிபந்தனையை இந்தியாவின் மீது சுமத்திவிட்டார்கள். இதுதான் "தர்ம கர்த்தர்கள்" நம்மைப் பாதுகாப்பது போலும்! இந்தியாவின் செலவாதார நிலைமையை அபிவிருத்தி செய்யக்கூடிய முறையில் இந்தியாவை ஆங்கிலேயர் ஆண்டிருந்தால், அவர்களது பொருள்களை விற்பதற்கு இடந்தேடி அலையவேண்டி யிருக்காது. இந்தியாவே முழுவதையும் வாங்கக்கூடிய சக்தியுள்ளதாகவிருக்கும்.

## ஜப்பானும் இந்தியாவும்

1915ம் வருஷத்தில் இந்தியாவின் இறக்குமதி 150 கோடி ரூபாயும், ஏற்றுமதி 199 கோடி ரூபாயும் மதிப்புள்ளதாக இருந்தன. அதே காலத்தில் ஜப்பானின் இறக்குமதி, ஏற்றுமதிகள் முறையே 66 கோடியும், 88 கோடியும் ரூபாய்கள் மதிப்புள்ளவைகளாக விருந்தன. 10 வருஷங்களுக்குப் பின் இந்தியாவின் இறக்குமதி 352 கோடி ரூபாயும், ஏற்றுமதி 400 கோடி ரூபாய்ம் மதிப்புள்ளவைகள். ஜப்பானின் கணக்கு, இறக்குமதி 321 கோடி ரூபாயும், ஏற்றுமதி 288 கோடி ரூபாயும் மதிப்புள்ளவைகளாக விருக்கின்றன. இந்தியாவின் ஜனத்தொகையில் ஐந்தில் ஒருபாகமுள்ள ஜப்பான் இவ்வளவு அபிவிருத்தி யடைந்திருப்பதற்கு ராஜீய சுதந்திரமே காரணம்.

பல கமிஷன்களை நியமித்தார்கள். ஆனால் அவைகளால் ஒரு பயனும் விளையவில்லை. கைத்தொழில், விவசாயம், நாணயச்செலாவணி, இனமாற்று முதலிய கமிஷன்கள் ஏக காலத்தில் நியமிக்கப்பட்டு, நாட்டின் செல்வாதார நிலைமையை அடிப்படையாகக் கருதி முடிவு செய்தாலல்லாது ஒருபலனும் விளையப் போவதில்லை.

இந்தியாவின் வரிப்பளுவோ தாங்க முடியாததாகவிருக்கிறது. வரிப்பண[illegible] ஏராளமாக [illegible] கைத்தொழில், வர்த்தகம் முதலியவைகளை அபிவிருத்தி செய்யவும் உபயோகமான செலவோ அல்லது மிச்சமோ இல்லாத நிலைமையில் தேசத்துக்கு எவ்வித நன்மையும் கிடையாது. அரசாங்கம் நன்கு

நடைபெறுவதற்கு வரிப்பணம் வேண்டியதவசியம்தான். அதற்கு, ஜனங்களது கொடுக்கும் சக்தியை அதிகப்படுத்தவேண்டும் அல்லது நிர்வாகச் செலவைக் குறைத்துக் கொள்ளவேண்டும்.

### வரிப்பளு

இப்பொழுது இந்தியர்களின் வருமானம் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் காலக்ஷேபச் செலவும் உயர்ந்துவிட்டதால், நாட்டில் பஞ்சம்தான் மிகுந்திருக்கிறது. யுத்தத்துக்கு முன் இந்தியர்கள் சராசரி 18 கஜம் துணிவீதம் உடுத்தனர். இப்பொழுது உடுத்துவது சராசரி 10 கஜம்தான். விருந்தே நாட்டில் தரித்திரம் விளங்கவில்லையா? நிர்வாகச் செலவைக் குறைக்கும்படி கேட்பது தவறாகுமா? தகுந்த கொடுத்தால்தான் முதல் தரமான சாமர்த்தியசாலிகள் கிடைப்பார்களென்ற பல்லவிதான் ஓயாது பாடப்படுகிறது. சம்பளம் கொடுக்க வழியில்லாதபோது தேசத்தின் சாமர்த்தியசாலிகளை உத்தியோகத்தில் நியமிப்பதுதான் ஒரு நாகரிகமுள்ள அரசாங்கத்துக்கு அழகாகும்.

### இந்தியா-ஜப்பான் வரி

40 வருஷங்களுக்கு முன் ஜப்பான் தேசத்தின் வரி தலா ரூ 3 வீதமிருந்தது. இப்பொழுது தலா ரூ 54 வீதம் உயர்ந்திருக்கிறது. இந்தியாவின் வரியோ தலா ரூ 2-8-0 வீதத்திலிருந்து ரூ 7 வீதமுயர்ந்திருக்கிறது. இந்தியாவின் உயர்வு 3 மடங்கு; ஜப்பானின் உயர்வு 18 மடங்கு. ஜப்பானியர்கள் வரியைப்பற்றிக் குறை கூறவில்லை. காரணமென்ன? ஜப்பான் சுய ஆட்சி காரணமாகச் செல்வாதார நிலையைப் பெருக்கியிருப்பதும், இந்தியாவின் தலைவிதி இங்கிலாந்திலுள்ள இந்தியா மந்திரி சபை யென்னும் வியாபார சபையாரின் கைவசமிருப்பதும் தான்.



### தொழிலாளர்.

“சமூகக் கட்டுப்பாடுகளும், செல்வாதார நிலைமையும் ஒரு நாட்டின் கைத்தொழில் மிகுதியையே பொருத்திருக்கின்றன” என்று வைஸ்ராய் இர்வின் பிரபுவும், பம்பாயின் மாஜி கவர்னர் ஸ்ரீ லாயிடும் கூறியிருக்கிறார்கள். ஆண்டு தோறும் சர்வகலாசாலைப் பட்டம்பெற்று வெளிவரும் எண்ணிறந்தவர்கள் வேலையில்லாது திண்டாடுகிறார்களென்பது வைஸ்ராய்க்குத் தெரியும். இவர்களுக்குப் போதிய வேலை கொடுப்பதற்குக் கைத் தொழிலை அபிவிருத்திசெய்து, செல்வாதார நிலையையும், சமூக நிலையையும் ஒழுங்குபடுத்துவது வைஸ்ராயின் வேலையாகும். அதிகக் கூலி கொடுப்பதால் செல்வாதாரநிலை பாதிக்கப்படாதென்பதை அமெரிக்கா ருசுப்பிக்கிறது. எந்த இந்தியனிடம் கேட்டபோதிலும், இந்தியர்கள் உண்ண உணவும், உடுக்க உடையுமின்றித் தவிப்பதை ஒப்புக்கொள்வான். இந்த நாட்டினருக்கு உணவளிப்பது விவசாயமும், கைத்தொழிலும்தான். இவைகளை அபிவிருத்தி செய்வதால் தொழிலாளிக்கு அதிகக் கூலி கொடுக்க முடியும். அதிகக் கூலி கொடுப்பதென்றால், ஜனங்களின் வாங்கும் சக்தியும் அதிகரிக்கிறது. ஆகையால் தேசத்தின் செல்வாதார நிலைமை உயர்வதால், விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் முதலியவைகளும் முன்னேற்றமடைகின்றன.

### முதலாளி-தொழிலாளர்

தொழிலாளரது உதவியில்லாமல் முதலாளிகளும், முதலாளிகளது உதவியில்லாமல் தொழிலாளரும் வாழமுடியாது. தொழிலாளரின் நன்மை, கைத்தொழில்களுக்களிக்கப்படும் ஆதரவையே பொருத்திருக்கிறது. தங்களுக்கு வேண்டிய சௌகரியங்களை முதலாளிகளிடமிருந்து பெறுவதற்காக மாத்திரம் தொழிலாளர்கள் சங்கங்களமைத்துக் கொள்ளாமல், கைத்தொழிலின் அபிவிருத்திக்காக முதலாளிகளுடன் சேர்ந்து போராடுவார்களானால் அவர்களது நிலைமை உயர்வடையு மென்பதில் சந்தேகமில்லை.

அவர்கள் கூறுகின்ற எல்லா நிபந்தனைகளையும் முதலாளிகள் ஏற்றுக்கொண்டே தீருவார்கள். இருவரது நன்மையையும் கருதித் தான் உலகிலுள்ள எல்லாத் தேசங்களும் தேசியக் கைத்தொழில்களுக்குப் பாதுகாப்பளித்து, தொழிலாளர்களுக்கு வேலைகிடைக்கும்படி செய்திருக்கின்றன.

விவசாயத்தாலும், கைத்தொழிலாலும் மாத்திரம் பிழைக்கின்றவரும் அமெரிக்காவில் ஒருவனது சராசரி வருமானம் வருஷமொன்றுக்கு ரூ 2,000. கைத்தொழிலால் மாத்திரம் ஜீவிக்கும் இங்கிலாந்தில் தலா ரூ 1000 ஆகவும், கனடாவிலும் ஆஸ்திரேலியாவிலும் தலா ரூ 550 வீதமுமிருக்கின்றன. ஏழை இந்தியாவின் வருமானம் ரூ 60 என்றும் 100 என்றும் சொல்லிக்கொள்ளப் படுகிறது. நூறு ரூபாய் வீதம் வைத்துக்கொண்டால் கூட வரி ரூ. 10 போக பாக்கி ரூ. 90-ல் தான் ஜீவிக்கவேண்டும். மாதம் ஒன்றுக்கு ரூ 7-8-0 தான்! இப்படிப்பட்ட ஏழைகள் என்ன விலைக்கு சாமான் வாங்க முடியும்!! ஆகையால் தேசத்தின் பொதுவான செல்வதார நிலைமையை உயர்த்துவதற்குத் தொழிலாளரும், முதலாளிகளும் ஒத்துழைத்தால் மாத்திரமே முடியும்.

## முடிவுரை

ரிசர்வ் பாங்கி, கப்பல் வர்த்தகம், நாணயமாற்று விகிதத்தை 13 பென்சாகவே ஸ்திரப்படுத்தல், நெசவுத் தொழில் பாதுகாப்பு முதலியவைகளைக் குறித்துத் தீர்மானங்கள் செய்யப்படவேண்டும். இந்தியாவின் எதிர்கால நன்மைக்கு அடிப்படையான விஷயங்களைப்பற்றி மாத்திரமே நான் குறிப்பிட்டிருக்கிறேன். இந்திய அரசியல் கொள்கை குறுகிய திருஷ்டியுடையதென்றும், இங்கிலாந்துக்கும் அது நன்மை பயப்பதாகாதென்றும் குறிப்பிட்டேன். சமீபத்தில் நியமிக்கப்பட்ட விவசாயக் கமிஷன் விஷயத்தில் வேண்டிய அபிவிருத்தி செய்வதுடன் இந்திய வியாபார நிபுணர்களைக் கலந்தாலோசித்து இந்தியாவின் வியாபார நிர்வாகத்தை இந்தியர்கள் வசம் ஒப்புவிக்கும்படி வைசிராயைக் கேட்டுக்கொள்கிறேன்.

---



# விவசாயமும், ஏழை விவசாயிகளும்.

உலகில் வாழ்கின்ற மனுஷர்களால் விவசாயம், கைத்தொழில் முதலான பலவகைத் தொழில்களும் செய்யப்பட்டு வருகின்றன. அவற்றுள்ளெலாம் மிகச் சிறப்புடையது விவசாயத் தொழிலே.

"வேந்தர்ன் முதலாகி விளங்குகின்ற கலைபினத்து
மோனவர் செல்லரு முழுவார்தந் தலைக்கடைக்கே
கோதைவேல் மன்னவர்தங் குடைவளமுங் கொழுவாமே
யாதலா லவர்பெருமை யாருரைக்க வல்லாரே."

என்ற ஆன்றோர் மெய்யுரையின்படி சகலவிதமான வளங்களும் விவசாயத்தை மூலாதாரமாகக் கொண்டே விருத்தியடைகின்றன. மனிதனின் உயிர்வாழ்க்கை உணவைப் பொறுத்ததாதலின், உணவிற்குக் காரணமாயுள்ள விவசாயமில்லாவிட்டால் மனிதன் உயிர் வாழ்தலியலாதென்றாகும். மானம், கல்வி, வண்மை, அறிவுடைமை முதலாகிய எல்லாம் உணவிற்கு அடுத்தபடியாகவே யுள்ளன. உணவு கிடைப்பதரிதாகின் ஈண்டுச் சொல்லப்பட்டயாவும் நிலைபெறுதலருமையாகும்.

"மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்து விடும்."

எனப் பெரியாரும் பணித்தனர். ஆகவே சகலவிதமான வளங்களும் சிறப்படைதற்கு மூலாதாரமாயுள்ளது விவசாயமே யென்பது நன்கு வலியுறுத்தப்பட்டது.

இவ் விவசாயமானது, மனிதனுக்கு உயரிய எண்ணங்களை யளிக்கவல்லது. உடல் வளத்துக்கும் இன்றியமையாதது. வானத்திற் சுயேச்சையாகப் பறந்து திரியும் பட்சிகள் போன்று யாதோர் அச்சமின்றிச் சுயேச்சையாய் வாழும் வாழ்க்கையை யுடையவன் விவசாயியே. ஓர் உத்தியோகம் செய்பவன் தன் மேலதிகாரிகளுக்கஞ்சியும், இன்னும் பலவிதமான அச்சங்களுடனுமிருந்து தன் காலத்தைக் கழிப்பான்.

ஆனால் ஓர் விவசாயிக்கோ ஓர் விதமான அச்சமுங் கிடையாது, உரிய காலத்தில் தனது நிலத்தை யுழுது பசளையிட்டுப் பண்படுத்தி விதையை யிடுகிறான். அது பருவமடையும் நேரம் அவற்றின் பிரயோசனத்தைப் பெற்றுக் கொள்ளுகிறான். மணிக்கூடும் பிற சாதனங்களும் வைத்துக் காலத்தை யறிகிறானில்லை. இயற்கையின் உண்மைகளை நோக்கியதனுடன் பயில்வதால் காலத்துக்கேற்றவிதமான செய்கைகளைச் செய்கிறான். பண்டைத் தமிழ் நூற்களில் கூறப்பட்டிருக்கும் 'வேங்கை மலர்தல் கண்டு தினை விளைவை யறிந்து கதிர் கொய்வார்கள்' என்பது முதலிய வசனங்களைக் கவனித்தால் ஓர் விவசாயி எவ்வளவு தூரம் இயற்கையொடு பயின்றிருக்கிறானென்பதினிது விளங்கும்.

எந்நாளும் காற்று, மழை, வெயில் இவற்றோடு பழகுவதாலும், உடம்பில் வியர்வையுண்டாகத் தொழில் செய்வதாலும் செவ்விய உடல் வளத்தைப் பெற்றுக் கொள்ளுகின்றான்.

கிறிக்கற் (Cricket) கால் பந்து (Foot ball) முதலான உடற் பயிற்சிக்குரிய சாதனங்கள் அவனுக்கு வேண்டியதில்லை. உழுதல், நடுதல், களை கட்டல், களைதல், பாய்ச்சுதல் முதலான தொழில்களினாலேயே உடற் பயிற்சி பெற்றவனாகின்றான்.

ஓர் விவசாயினுடைய தோட்டத்திற் சென்று பார்க்கும்போது, அங்கு பச்செனத்தோன்றும் பயிர்களினழகும், ஜில் என்ற சப்தத்துடன் கல்லெனப் பாயும் தண்ணீரொலியும், அப் பயிரினும்



தண்ணீரினும் படிந்து மெல்லென வீசும் காற்றின் ஸ்பர்சமும், பிறவும் எவரைத்தான் இன்பத்துளாழ்த்தாது. இவ்வியற்கையொடு படிந்த இன்பத்துட்டிளைக்கும் விவசாயியினுடைய இன்பந்தானென்னே! இவனே உயிர் வளமும், உடல் வளமும் ஒருங்கமையப் பெற்றவனாகின்றான். இவனுடைய வாழ்க்கையன்றோ இயற்கையொடு பொலிந்த இன்ப வாழ்க்கை.

இவ்விதமாகப் பல்லாற்றானும் சிறப்பு வாய்ந்த விவசாயமானது பலவகைப்படும். அவற்றுள் ஏல விவசாயமும் ஒன்றாகும். இவ்வேல விவசாயம் திருவாங்கூர், இலங்கை, குடகு, சுமாத்திரா, மைசூர் முதலான சில இடங்களில் மாத்திரம் செய்யப்படுகின்றது. மழை வளஞ் சிறந்த மலைப் பிராந்தியங்களே ஏலக் கிருஷிக்கேற்ற இடமாகும். தற்காலத்தில் மிகச் சிறந்த ஏலத்திற்குப் பேர்போனதாய் விளங்குவது திருவாங்கூர் சமஸ்தானமே.

ஏலம், லவங்கம், சாதிக்காய் முதலாகச் சொல்லப்படும் வாசனைப் பொருட்களில், ஏலமே மிகச்சிறந்தது. ஆதலினாலேயே பண்டைத் தமிழ் நூல்களிலெல்லாம் ஏலத்தை முதலாக வைத்துக் கூறப்பட்டிருக்கின்றது. இவ் வேலக் கிருஷியைச் செய்வதில் திருவாங்கூர் குடியானவர்களே யதிக சிரத்தையெடுத்திருக்கிறார்களென்பது யாவருமறிந்த உண்மை. இத் திருவாங்கூர் ஏல விவசாயிகள் தமக்கென ஒரு சங்கங்கண்டு அதன் மூலம் தங்கள் தொழிலை அபிவிருத்தி செய்துகொண்டு வருதலே இவர்கள் இனிமேல் அடையப்போகும் உன்னத நிலையை நன்கு விளக்குகின்றது. இதுவன்றியும் சங்கச் சார்பாக ஓர் பத்திரிகை நடைபெறுவதை உற்று நோக்குங்கால், இவ்வேல விவசாயம் நாளடைவில் சிறந்தோங்கி வளர்ந்து இந்திய நாட்டிற்கு மிகுந்த செல்வமளிக்குமென்பதிற் சந்தேகமில்லை.

ஏல விவசாயிகள் ஒற்றுமை நாடியுழைத்துத் தாம்தாமறிந்த அநுபவங்களைத் தம் பத்திரிகை மூலம் வெளியிட்டுப் பின்னும் பின்னும் ஏலக் கிருஷியைச் சீர்பெறச் செய்தல் வேண்டும்.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?

என்றார் பாரதியார்.

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் எல்லா நலன்களையும் ஒருங்கே பெற்று, உலகத்திற்கே ஓர் வழிகாட்டியாக அமைந்து மென்மேலும் விருத்தியடைய எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் பாலிப்பானாக.

சுபம்.

இயற்கை மகவு.



# சர்வ தேச விவசாய விருத்தி ஸ்தாபனம்.

# The International Institute of Agriculture.

பண்டைக் காலத்தில் நமது தவத்தாய் நாடாம் பரத கண்டம் சுதந்திரத்துடன் விளங்கியது. அந்நாட்களில் நமது அன்னை பாரதியின் மீது இலட்சுமி தேவி சொர்ணமாரி சொரிந்த வண்ணமாகவே இருந்தாள். தேவி சரஸ்வதி அவள் நாவில் தாண்டவமாடிக் கொண்டிருந்தபடியால், கல்வியிற் சிறந்த கவிஞர்களும், கலைகள் கற்ற உயர்ந்த கலைஞானிகளும், அறவோர்களும், அறிவோர்களும், ஆன்றோர்களும் நம் தேசத்தில் கணக்கற்றிருந்தார்கள். இந்திய மாதாவின் தோள்களில் வீர லட்சுமி விளங்கிக் கொண்டிருந்தபடியால், வீர ரசம் பொங்கித் ததும்பி நாட்டில் எங்கும் வீரர்கள் பரவியிருந்தார்கள். அறத்தின் உயர்வுக்கும், அறிவின் பெருக்கிற்கும், உணவு வகைகளுக்கும், உடை உதவிகளுக்கும் நமது மாபெரும் பாரத மாதாவை உலகம் பூராவும் எதிர்நோக்கி நின்றபடியால் பாரதத்தாய் உலகத்தின் மகுட மணியாக விளங்கினாள்.

அவ்வாறு அனைத்திலும் சீரும், சிறப்பும் பெற்ற நமது தவத்தாய் இப்பொழுது எவ்வாறிருக்கிறாள்? 33 கோடி அவள் மக்களில் சுமார் 10 கோடிக்கு மேல் ஒரு வேளை ஆகாரம் உண்டு, அடுத்த வேளை ஆகாரம் அகப்படாது அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறான். அவள் செல்வமெல்லாம் சிதைந்தன. கலைகளெல்லாம்

கைவிடப் பட்டன. இப்பொழுது நமது அருமை அம்மையினிடம் வறுமையும், பிணியும், அடிமை வாழ்வும், அறியாமையும் வந்து அடுத்துக் குடிபுகுந்துவிட்டன. சுருங்கச் சொன்னால், மணி இந்தியா பிணி இந்தியாவாகவும், செல்வ இந்தியா தரித்திர இந்தியாவாகவும் மாறிக் கவிழ்ந்து கொண்டிருக்கிறது. அவளிடம் இனி என்ன இருக்கிறது? எல்லாம் அழிந்துபோய்ப் பழம் பெருமை மட்டும் மீதியிருக்கிறது.

பழம்பெரு இந்தியாவை நினைத்துக் கதறிக் கண்ணீர் விடுவதனால் காரியமொன்றுமாகாது. சமீப காலத்தில் கேவலமாயிருந்த தேசங்களான இங்கிலாந்தைப் பாருங்கள், ஜெர்மனியை நோக்குங்கள். புதிதாய்க் குடியேறப்பட்ட அமெரிக்காவையும், ஆஸ்திரேலியாவையும் நன்கு கவனியுங்கள். மேற்காட்டிய தேசங்களில் கட்டாயக் கல்விமுறை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அங்கு பள்ளிகளிலேயே தொழில்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன; சாஸ்திரீய விவசாயம் நடைபெறுகிறது. தொழிற்சாலைகள் மிக்க பெரியனவாயிருக்கின்றன. இவைகளெல்லாவற்றிற்கும் காரணம்? அதிகச்செலவில் அபாரமான சக்திகளை அடைவதற்கு ஆராய்ச்சிகள் செய்வதும், அவ்வாறு ஆராய்ந்து கண்டவைகளைத் தேசத்தார் அனைவருக்கும் அளித்துத் தேசாபிவிருத்தியைக் கண்ணும் கருத்துமாய்க் கவனிப்பதே. அங்கு ஆஸ்திகர்களையும் அதிகாரிகளையும் காட்டிலும், அறிவாளிகளை அதிகமாக மதிக்கிறார்கள்; ஆதரிக்கிறார்கள். குலத்தையும், கோத்திரத்தையும், மதத்தையும், அந்தஸ்தையும் கவனிக்காது, உண்மை உழைப்பை உணருகிறார்கள். முன்னேற்றத்தைப் போற்றுகிறார்கள். யுக்தியை மெச்சுகிறார்கள். மேதைகளில் உழைப்பதற்கு வழிகள் உண்டு. அறிவிற்குத் தக்கவாறும், அனுபவத்திற்கு வேண்டியவாறும் எவரும் வேலைகள் செய்வதற்குப் பலவற்றிற்கும் பல்வேறு ஸ்தாபனங்கள் அங்குண்டு. இந்த இப்பொழுது எடுத்துக்கொண்டது விவசாய ஸ்தாபனம். இதைப்பற்றிக் கவனிப்போம்.



இந்நாட்டைப் போன்று ஐரோப்பிய தேசங்களில் அளிக்கும் சாதனங்களாகிய இயற்கை விளை பொருள்கள் அதிகமாகக் கிடையாது. ஆனால் ஆக்கும் (உற்பத்தி) சாதனங்கள்தான் அங்கு அதிகமாக விருக்கின்றன. இயற்கையாகவே வளமற்ற அந்நாடுகளை அவர்களுடைய அபார உழைப்பால் மகா மேன்மைப்படுத்தியிருக்கிறார்கள். அமெரிக்கா இயற்கை வளமும், வனப்பும், செயற்கை உரமும் பெற்றுக் கைத்தொழில்களில் முன்னேறிக் கொண்டிருப்பதால், செல்வத்திலும், செல்வாக்கிலும், அறிவிலும், ஆற்றலிலும் இப்பொழுது உலகில் தலைசிறந்து விளங்குகிறது. ஜப்பானில் இயற்கையாகவே விளை பொருள்கள் குறைவாயிருப்பினும், முன்னேறிக் கொண்டிருக்கும் மற்ற தேசங்களுக்குச் சற்றும் இளைக்காது, மகா தீவிரமாகக் கைத்தொழில் விஷயமாக உழைத்துக் கொண்டிருக்கிறபடியால், விளை பொருள் சாதனம் சரியாய் அமையாததைச் சரிசெய்துகொண்டு, அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக விளங்குகிறது ஜப்பான். ஆஸ்திரேலியாவில், ஆடு, மாடு, பன்றி, கோழி முதலியவைகள் வளர்ப்பதிலும்; விவசாய விருத்தியிலும் உதவி செய்வதுமன்றி, ஆட்டு ரோமத்தையும், பாலடைக் கட்டியையும், வெண்ணெயையும், பதனிடப்பட்ட இறைச்சிகளையும், கோழி முட்டைகளையும் நல்ல விலைகளுக்கு அயல் நாடுகளில் விற்கப் போதியவளவு அங்கு சர்க்கார் உதவி செய்திருக்கிறார்கள். அமெரிக்க விவசாயிகள் மிக்க வசதிகளுடன் சந்தோஷமாக வாழ்கிறார்கள். இந்நாட்டில் ஓர் உயர்தரக் குடியானவனுக்கு வண்டியிருப்பது போலவே, அமெரிக்காவில் அதி சாதாரண விவசாயிக்கும் மோட்டார் வண்டி உண்டு. 3 வருடத்திற்கு முந்திய கணக்குப்படி அங்கு 5 பேருக்கு ஒரு மோட்டார் வண்டி இருந்ததாம். அமெரிக்காவில் விவசாயிகளின் நிலை மிகவும் உயர்வு. அங்கே சர்க்காரும், சர்வகலாசாலைகளும் அநேக ஆராய்ச்சிகளைச் செய்து, அவைகளை ஜனங்களுக்கு உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவில்தான் பேர்பெற்ற லூதர் பர்பாங்க் (Luther Burbank) என்பவர் [illegible] பெரும் ஆராய்ச்சிகளைச் செய்கின்

பயனாகச் சிருஷ்டியினுள் வேறுபாடுகளை உண்டாக்கி, உலகத்தைத் திகைக்கும்படி செய்தார். வெண்மையான புஷ்பங்களை புஷ்பிக்கும் செடிகளைக் கறுப்பு, சிவப்பு முதலிய பலவேறு நிறப் பூக்களைப் பூக்கும்படி செய்தார். கசப்பான கனிகள் கொடுக்கும் மரங்களையோ, செடிகளையோ, கொடிகளையோ இனிப்பு, புளிப்பு அல்லது வேறு ருசியுள்ள கனிகளைக் கொடுக்கும்படி ஆக்கினார். சிறிய காய்கள் காய்ப்பவைகளைப் பெரியவைகளாகக் காய்க்கும்படி செய்தார். ருசியற்றவைகளை ருசியுற்றவைகளாகவும், மணமற்றவைகளை மணமுற்றவைகளாகவும் சக்தியற்றவைகளைச் சக்தியுற்றவைகளாகவும், சிறியவைகளைப் பெரியவைகளாகவும் தாவர உலகத்தில் அநேக அற்புதங்களை நடத்திக் காட்டினார்.

இவ்விஷயம் இப்படியிருக்க, ஐக்கிய ராஜ்யத்தில் (Royal Agricultural Society) ராஜரீக தோட்டக்காரச் சங்கம் (Royal Horticultural Society) ஸ்காட்லாண்டு விவசாய சங்கம் (Highland and Agricultural Society) முதலிய உலகம் போற்றும் சங்கங்கள் ஏற்பட்டு விவசாயத் துறையில் வேண்டிய பலவேலைகளைச் சர்ச்சைகளுடன் செய்து கொண்டிருக்கின்றன. ஐரோப்பியர்கள் விவசாயத்தை சாஸ்திரிய முறைப்படிச் செய்து நல்ல லாபமடைகிறார்கள். ஆராய்ச்சிகளின் துணையைக்கொண்டு ஜெர்மனியில் சிலவிடங்களில் மழையைக்கூடப் பெய்விக்கிறார்கள். நம்மிந்தியாவில் நாம் என்னசெய்து கொண்டிருக்கிறோமென்பதைக் கவனிப்போம்.

இந்தியா ஒரு விவசாய நாடாயிருப்பினும், விவசாயத்தில் நாம் ஒரு வகையிலேனும் முற்போக்கடையவில்லை. இங்கு விவசாயிகளோ அறியாமையில் அழுந்தி, வறுமையால் வாடி, வரிச்சுமையால் நசுங்கிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு என்றுதான் விமோசனமோ? கடவுள்தான் அறிவார். இந்திய விவசாயிகள், உழுத நிலத்தையே உழுது கொண்டிருக்கிறார்களேயன்றிக் காலத்திற்கேற்ற வண்ணம் நூதனமான முறை



களைக் கண்டறிந்து முன்னுக்குவர முடியவில்லை. அறியாமையில் ஆழ்ந்து, பிணிகளால் தாக்கப்பட்டுத் தரித்திரத்தால் தகிக்கப்பட்டுக்கிடக்கும் இந்நாட்டு விவசாயிகளைப்போல் உலகில் வேறெந்தேசங்களிலும் விவசாயிகளில்லை.

லார்டு மேயோ கவர்னர் ஜெனரலாயிருக்கும் காலத்தில் 1869 வருஷத்தில் இந்தியாவில் தனியாக விவசாய இலாகா ஏற்பட்டு, இன்றளவும் மெதுவாக விருத்தியாகிக்கொண்டுவருகிறது. இதன் பயனாக மாகாணங்கள் தோறும் கிருஷி இலாகா ஏற்பட்டிருக்கிறது; விவசாயக் கல்விச்சாலையும் ஏற்பட்டிருக்கிறது. விவசாய இலாகாவிற்குத் தகுந்த உத்தியோகஸ்தர்களை உண்டாக்கிக் கொண்டு இவைகள் வருகின்றனவேயன்றி, குடியானவர்களுடன் ஒற்றுழைத்து, அவர்களுக்குப் போதிய நன்மைகளைச் செய்யவில்லை. விவசாய இலாகா ஒன்று இருக்கிறதென்று குடியானவர்களில் 100-க்கு 10 பேருக்குக்கூடத் தெரியாதிருக்கிறது. கோடானு கோடிப்பணம் உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கே தாரை வார்க்கப்படுகிறது. நமது தேச நிலைமை பரிதாபம்! பரிதாபம்!!

அமெரிக்காவிலிருக்கும் சிகாகோ நகரத்து ஸ்ரீமான் ஹென்றி பிப்ஸ் (Henry Phipps) என்னும் பரோபகாரியால் பொது நன்மையின் பொருட்டு மாட்சிமை தங்கிய ராஜப் பிரதிநிதி அவர்களிடம் அன்புடன் அளிக்கப்பட்ட 20.000 பவுன்களுடன் வேறு வழியிலிருந்து 10,000 பவுன்களும் வந்தன. இந்தப் பெருந்தொகையில் ஒரு பாகத்தை நீலகிரி மலை குன்னூரில் வெறி நாய்க்கடி ஆஸ்பத்திரி (Pasteur Institute) கட்டுவதற்காகக் கொடுத்துவிட்டுப் பெரும்பாகத்தைப் பீஹாரில் பூஸாவில் பிரமாண்டமான விவசாயக் கல்லூரி விசாலமான பண்ணையுடன் கட்டுவதற்கு லார்டு கர்ஸன் அவர்கள் கொடுத்தார். இப்பொழுது இந்தியாவில் இதே விவசாயத்திற்கு ஒரு பெரிய கலாசாலையாகவும், ஆராய்ச்சி

சாலையாகவும் (Central Imperial College) இருக்கிறது. 1905-06-ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்டின் அறிக்கையின்படி விவசாய விருத்திக்காக வருஷம் 1-க்கு 20 லட்சம் ரூபாயாகவும், பின்பு 25 லட்சம் ரூபாயாகவும் கொடுக்கப்பட்டதின் பயனாக கோயமுத்தூர், புனா, லையல்பூர், நாகபூர், சாபூர், கான்பூர் முதலிய இடங்களில் மாகாண விவசாயக் கல்விச்சாலைகள் உண்டாக்கப்பட்டன. இந்த ஸ்தாபனங்கள் இந்தியாவில் இதுவரையிலும் ஒரு பேதத்தையும் உண்டாக்கியிருக்கவில்லை. இந்திய விவசாயிகள் தங்களாகவே ஏராளமான ஏற்பாடுகளை எடுத்துக்கொண்டு விழிப்புடன் முயற்சி செய்தாலன்றி இவர்கள் உலகத்தின் முன்னணியில் நிற்க முடியாது.

## ஸ்தாபிதம்.

சர்வதேச நன்மையை உத்தேசித்து ஒரு நாட்டார் மற்ற நாட்டார்களோடு ஒத்துழைக்க வேண்டுமென்கிற மனப்பான்மை இப்பொழுது உலகமெங்கும் ஜனங்கள் அடைந்து கொண்டு வருகிறார்கள். கடந்த ஐரோப்பிய மகா யுத்தத்தின் பொழுது அமெரிக்கா ஜனாதிபதி அறிஞர் வில்சன் (Dr. Wilson) அவர்களுடைய பெருந்தன் முயற்சியால் சர்வதேச சங்கம் (League of Nations) ஏற்பட்டிருக்கிறது. ஆனால் நான் அடியில் விவரிக்கப்போகும் (Institute of Agriculture) சர்வதேச விவசாய அபிவிருத்தி ஸ்தாபனம் இந்த சர்வதேச சங்கத்திற்கு முன்பே 1905-ம் வருஷத்தில் ஏற்பட்டதாகும்.

உலகமெங்கும் விவசாயிகள் தங்களுடைய வழிப்பத்தைத் தவிர்த்துத் தங்களுடைய நிலைமையையும், இதர விஷயங்களையும் அறியாதவர்களாயிருப்பதால், இன்னொரு பிரிவினர்கள் அவர்களுடைய அறியாமையை அறிந்து அவர்களை ஏமாற்றித் தங்களுடைய ஸ்திதியை உயர்த்திக் கொள்கிறார்களென்றும், விளைச்சல் விருத்தியாக ஒரு தேசத்து விளை பொருள்கள் வியாபார விஷயமாக இதர தேசங்களுக்கும் தெரியப்பட வேண்டுமென்றும்,



மேற்படி அறிக்கைகள் எல்லா தேசங்களுக்கும் அறிவிக்கப்பட வேண்டுமென்றும் உணர்ந்து, உலகத்தின் ஒவ்வொரு தேச விளை பொருள்களின் விபரங்களைச் சேகரிக்கவும், அறிவிக்கவும் விவசாய சம்பந்தமாய் பொருளாதாரம், கைத்தொழில் முதலியவைகளைப் பற்றிய ஆண்டுப் பிரசுரங்களைப் பிரசுரிக்கவும், சுருங்கச் சொன்னால், உலகில் விவசாய சம்பந்தமான சகல விஷயங்களை அறியவும் அறிவிக்கவும் ஒரு சர்வதேச விவசாய விருத்தி ஸ்தாபனம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன் பிரசாரஞ் செய்தார் அமெரிக்கா வாசியான டேவிட் லூபின் (David Lubin) என்னும் லோகோபகாரி. இந்நோக்கத்துடன் அமெரிக்காவில் அநேகவிடங்களுக்குச் சென்று, அநேக பெரியோர்களைச் சந்தித்துச் சங்கதியைத் தெரிவித்ததில், இவரை அவர்கள் உற்சாகிக்காததால், அவரது ஊக்கம் குன்றாமலே அநேக தேசங்களுக்குச் சென்று அநேக அரசர்களுடைய உதவிகளை நாடினார். மூன்று ஊக்கத்தோடு முயற்சியெடுத்தும் இத்தாலி தேசத்திற்கு வந்தவுடன், இத்தாலிய அரசர் மாட்சிமை வாய்ந்த விக்டர் இமானுயில் (Victor Emmanuel) அவர்கள் அவரைப் பிரியத்துடனே வரவேற்று அன்புடன் அவரது விஷயங்களைக் கேட்டு, அவர் மேற்போட்டுக் கொண்டிருக்கும் பெருங் காரியத்தை அறிந்து ஆனந்தித்தார். அவ்வரசர் பெருமான் அவரது மகத்தான பரோபகாரத் தொண்டின் நோக்கத்தைப் போற்றியதுமன்றி, வருஷம் 1-க்கு 300 000 லீராஸ் (லீராஸ் என்பது இத்தாலிய நாணயம். 1 லயர் = 10 பென்ஸ். 1924-ம் வருஷத்திய நாணய மாற்றின்படி) வருமானம் வருகிற அவருடைய பூஸ்திதி ஒன்றை இனாம் சாசனமாக அளித்து, அரண்மனை போன்றதொரு மாளிகையையும் கட்டிக்கொடுத்தார். லோகாபிமானி டேவிட் லூபினுடைய கனவுகளும், நினைவுகளும், பேச்சுக்களும் இத்தாலி அரசர் பெருமான் விக்டர் இமானுயில் அவர்களின் அன்பான செய்கையின் மூலம் வெளிவந்திருக்கின்றன. அன்பர் அறிஞர் டேவிட் லூபினுக்கும் மாட்சிமை தங்கிய விக்டர் இமானுயில் அவர்களுக்கும் உலகம் என்றும் மிக, மிகக் கடமைப்பட்டிருக்கிறது.

இதுவுமன்றி, உலகத்தின் பல்வேறு அரசாங்கங்களுக்கும் அரசரது ஆஜ்ஞையின்படி இத்தாலிய அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட அழைப்பிற்கிணங்கி, 40 தேசங்களின் பிரதிநிதிகள் வரையில் வந்து, 1905-௵ ஜூன்மீ 7௳ கூடிய மகாநாட்டில் இந்த சர்வதேச விவசாய விருத்தி ஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பெற்றது. இந்த மகாநாட்டின் 9 வது தீர்மானப்படி இந்த ஸ்தாபனத்தின் நோக்கங்கள்:—

(1) பலவிடங்களிலிருக்கிற பலவகைச் சந்தைகளில் (Markets) தற்கால விலைகள், விவசாய விளைவுகளில் வியாபாரம், விளைச்சல், கால்நடை உற்பத்தி, விவசாய சம்பந்தமான பொருளாதாரம், கணக்கு விஷயமான அறிவிப்பு முதலியவைகளைச் சற்றேனும் தாமதமின்றிச் சேகரித்துச் சரிபார்த்து வெளியிடுவது.

(2) இவ்வித அறிவிப்புகளைத் தகுதியுள்ளவர்களுக்குக் கூடிய விரைவில் அனுப்பிப் போக்குவரவு செய்வது.

(3) பண்ணை வேலையில் கொடுக்கும் கூலியை அறிவிப்பது.

(4) உலகில் எந்த பாகத்திலேனும் புதிய வியாதிகள் பயிர் பச்சைகளுக்குத் தோன்றினாலும், இன்னின்ன வியாதிகளால் இன்னின்ன தேசங்கள் தாக்கப்பட்டனவென்றும், கூடுமானால் அவைகளுக்கு என்ன பரிகாரம் தேடவேண்டுமென்றும் பதிவு செய்வது.

(5) இன்ஷூரன்ஸ் செய்வது, கடன் கொடுக்கல் வாங்கல், விவசாய ஒற்றுழைப்பு முதலியவைகளை எல்லா வழிகளிலும் ஆராய்வதுந்தவிர, கடன் வாங்கல், இன்ஷூரன்ஸ், விவசாய ஒற்றுழைப்பு முதலியவைகள் பல்வேறு தேசங்களில் உபயோகப்படும் பொருட்டு நிர்மாணிப்பதற்கு வேண்டிய விஷயங்களைச் சேகரித்து வெளியிடுவது.



(6) சாஸ்திரிய அல்லது கற்றறிந்த சபையாரால் அல்லது சர்வதேச விவசாய காங்கிரஸ்களின் தீர்மானங்கள் போன்ற அறிவிப்புகளைக் கவனிக்கையில், விவசாயிகளின் நன்மைகளைக் காப்பதற்கும், அவர்களுடைய நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கும் வேண்டிய விஷயங்களை வழிகளுடன், உலகின் அநேக கவர்ன்மெண்டுகளின் அங்கீகாரத்திற்காகச் சமயம் நேரும்பொழுது அனுப்புவது.

(7) இந்த ஸ்தாபனத்தில் சேர்ந்த ஒரு தேசத்தின் பொருளாதார நன்மையையேனும் மற்ற எந்த விஷயத்தையேனும் இந்த ஸ்தாபனம் கவனிக்காது.

### வேலை

இது ரோமாபுரி நகரத்தில் வில்லா உம்பேர்டோ என்ற இடத்தில் "அரண்மனை" என்ற கட்டடத்திலிருக்கிறது. இந்த ஸ்தாபனத்தில் 74 தேசங்கள் அங்கங்களாய்ச் சேர்ந்திருக்கின்றன. உலகின் ஜனத்தொகையில் 100ல் 95-க்கு இதில் பிரதிநிதித்துவமிருக்கிறது. அநேகவித சர்வதேச விவசாய சம்பந்தமான காங்கிரஸுகள் இதன் ஆதீனத்தின் கீழ் நடைபெற்றிருக்கின்றன. 1919 ௵ல் லண்டனிலும், 1920 ௵ல் பாரிஸிலும் நடைபெற்ற சர்வதேச சங்கத்துடன் (League of Nations) இது ஒத்துழைத்திருக்கிறது. சர்வதேசக் காடுவளர்ச்சிக் காங்கிரஸை (First International Forestry Congress) இது முதன் முதலாகக் கூட்டி வைத்திருக்கிறது. 1922 ௵ ஜெனிவா மகாநாட்டில் இது துணையும் செய்திருக்கிறது. உலகத்தார் அறியும்படியாக பகிரங்கமாகத் தெரியாவிட்டாலும், உலக விவசாயத்திற்கு இது பெரிதும் நன்மை செய்து கொண்டிருக்கிறது.

### பிரசுரங்கள்

ஆராய்ச்சி செய்து நூதனமாய்க் கண்டுபிடித்த விஷயங்களை பயிர் முறைகளுக்குத் தக்க விதமாய் உபயோகப் படுத்துவதும், இன்னும் கூட்டுறவு, விவசாயக் கைத்தொழில் முதலிய இவை

விஷயங்களைப் பற்றியும் கூறும் ஒரு பத்திரிகையும் (International Review of Agriculture). பல நாடுகளின் விளைபொருள்களின் விபரங்களை ஒரே வகையில் ஒழுங்குபடக் கொண்டு வந்து, அந்தந்த விபரப்படி கணக்குகளை வெளியிடும் ஒரு மாசிகையும் (International Crop Report and Agricultural Statistics) சர்வதேச விவசாயக் கணக்கு ஆண்டு வெளியீடும் (International Year Book of Agricultural Statistics). சர்வதேச விவசாயச் சட்ட வருஷாந்திர நூலும் (International Year Book of Agricultural Legislation), சர்வதேச விவசாய அகராதியை (International Lexicon of Agriculture) பாகம் பாகமாகவும் இன்னும் சிற்சில உபர் நூற்களும் ஆங்கிலம் இத்தாலியன், ஜெர்மன், பிரென்ச், ஸ்பானிஷ் முதலிய ஐந்து ஐரோப்பிய பாஷைகளில் வெளியிடப்படுகின்றன.

## நிர்மாணம்

இந்த ஸ்தாபனத்திற்குப் பொதுச்சபை (General committee) என்று ஒன்று உண்டு. அதற்கு அங்கத்தினர்களின் அளவு கிடையாது. நிபுணர்கள் அடங்கிய 22 உட்பிரிவுச் சபைகள் (commissions) இதில் உண்டு. 51 சாஸ்திரீய நிபுணர்களும் 49 இதர உத்தியோகஸ்தர்களும் வேலைசெய்கிறார்கள். (1) பொதுக் காரியதரிசியின் காரியார்த்தப் பிரிவு (Bureau of The General Secretariat), (2) பொதுவான கணக்குப் பிரிவு (Bureau of General Statistics), (3) விவசாய சாஸ்திரப் பிரிவு (Bureau of Agricultural Sc), (4) பொருளாதாரமும் சீர்திருத்தமும் ஆராய்ச்சிப் பிரிவு (Bureau of Economics and Social Questions) என்று நான்கு பிரிவுகள் இதில் உண்டு. ஒவ்வொன்றிற்கும் ஒரு தலைவர் உண்டு. ஒவ்வொன்றும் பகுக்கப்பட்டு ஒழுங்கான முறையுடன் வேலை செய்கிறது.



## இதில் இந்தியா

நமது இந்தியா இந்த ஸ்தாபனத்தில் ஒரு அங்கம் பெற்றிருக்கிறது. இதுவரையில் அதற்கு இந்தியா 631, 171, 60 லீராஸ் கொடுத்திருக்கிறது. இவ்வளவு தொகை இங்கிருந்து கொடுத்திருப்பினும், இந்தியாவிற்கெனத் தனியாக ஒரு பிரதிநிதி கிடையாது. பிரிட்டிஷ் பிரதிநிதியே நமது தேசத்தின் காரியங்களைக் கவனித்துக்கொள்கிறார். நாம் பணம் கொடுத்தும் நமக்கு ஏற்பட்ட ஸ்தானம் கிடைக்கவில்லையே. பின்லண்டு, போலண்டு, சயாம் முதலிய சிறு தேசங்களுக்குக்கூட பிரத்தியேக அங்கத்தினர்கள் இருப்பதுடன் அவர்கள் அங்கு சென்று தம் தம் தேசங்களின் நிலைமையை உள்ளவாறு எடுத்துக்கூறி வேண்டிய வேலைகளைச் செய்யும்பொழுது நமது நாட்டிற்கென நம் நாட்டிலிருந்து பிரதிநிதி செல்ல அனுமதிக்கப்படாதது வருந்தத்தக்கதே. இது யாருடைய குற்றம்? நம்மைக் காப்பாற்றவந்ததாகச் சொல்லும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இதற்கு ஜவாப்தாரி. இரண்டு பூனைகளுக்கு வடை விஷயமாக ஏற்பட்ட வழக்கில் பஞ்சாயம் செய்த குரங்கின் கதை போலிருக்கிறது இவ்விஷயம். நமது தேசத்திற்கெனத் தனித்த ஒரு பிரதிநிதி ஸ்தானம் கிடைத்து அங்கு சென்றால்தான் இந்நாட்டின் நிலை நன்கு கவனிக்க முடியும். இதை யார் கவனிக்கப் போகிறார்கள்? நாம்தான் கவனிக்கவேண்டும்.

## முடிவுரை

ஆர்ய சமாஜம் தயானந்த சரஸ்வதி ஸ்வாமியால் ஏற்படுத்தப்பட்டு, இப்பொழுது எவ்வளவோ விருத்தியடைந்திருக்கிறது. பிர்ம சமாஜம் ராஜாராம் மோகன் ராயால் ஸ்தாபிக்கப்பெற்று, பெரிதும் பரவியிருக்கிறது. பிர்ம ஞான சங்கம் கர்னல் ஆல்காட் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டு, இப்பொழுது எல்லாத் தேசங்களிலும் பரவியிருக்கிறது. காசி ஹிந்து காலேஜ் டாக்டர் பெசண்டின் முயற்சியால் ஏற்பட்டு, இப்பொழுது ஒரு சர்வ கலா சாலையாக

மாறியிருக்கிறது. ராமகிருஷ்ண மிஷன், ஸ்வாமி விவேகானந்தரால் நிறுவப்பெற்றுத் தற்காலம் எவ்வளவோ விரிவடைந்திருக்கிறது. முஸ்தபா கமால் பாட்சாவால் மறைந்துபோன துருக்கி, மறுபடியும் உயிர் பெற்று அங்கோரா அரசாங்கமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு தனி மனிதர்களால் உலகில் எவ்வளவோ காரியங்கள் செய்யப்பட்டன, செய்யப்படுகின்றன. ஒரு மனிதனால் செய்யப்பட்ட எக்காரியத்தையும் இன்னொரு மனிதன் செய்யக்கூடும், மனிதனுடைய சக்தி அபாரமானது. அதைச் சரியான வழியில் உபயோகிக்க வேண்டும். சரியற்ற மார்க்கத்தில் செலுத்தினால், அதிகமான தீங்குகள் உண்டாகும்.

டேவிட் ஹரின் விக்டர் இம்மானுவேல் என்ற உலகோபகார உத்தமர்களின் பெயர்கள் உலகுள்ளளவும் நிலைத்திருப்பதாக. அவர்களின் உயர்தர உத்தம குணம் உலகத்திற்கு உதாரணமாக விளங்குவதாக.

நா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

---

விவசாய அபிவிருத்திக்காகச்
செலவு செய்யப்படும் ஒவ்வொரு பைசாவும்
நூறு நூறு மடங்காகத் திரும்பக் கிடைக்கிறது.

---



# எனது காங்கிரஸ் பிரயாணம்.

## முன்னுரை.

நமது இந்தியரின் தேசியக் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பான் கருதி, அகில இந்தியர்களின் சார்பாக ஆண்டுதோறும் நாட்டில் ஆங்காங்கே தேசிய மகாநாடு எனும் காங்கிரஸ் மகாசபை நடைபெற்று வருவதை யாவரும் அறிவர். இற்றைக்குச் சுமார் 43 வருடங்களாக இத்தேசிய மகாநாடு இந்தியாவில் பல மேதாவிகளின் அக்கிராசனத்தின் கீழ் கூடி, அவ்வக் காலத்திற்கேற்ப இந்தியரின் அரசியல் செல்வாக்கையும், பிற உரிமைகளையுஞ் சாதிக்க வேண்டி உழைத்து வருகிறது. 1885-ம் ஆண்டில் உமேச சந்திர பானர்ஜி, தாதாபாய் நௌரோஜி, கே. த. திலாங், ஜி. சுப்பிரமணிய ஐயர் முதலியோரது நன் முயற்சியாலேயே இக் காங்கிரஸ் ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டது. ஆரம்பத்தினின்றும் இம் மகாநாடு பலவித மாறுதல்களை யடைந்து வந்திருப்பினும், பொதுவாக உலகில் இந்திய மக்கள் பிற நாட்டு மக்களுக்குச் சமமாக தேசிய உரிமைகளைப் பெற்றுச் சுகமே வாழவேண்டுமென்ற ஒரு நோக்கத்தையே முதன்மையாகக் கருதி வந்திருக்கிறதெனக் கூறலாம். ஐரோப்பிய மகா யுத்தத்திற்கு முன்னிருந்ததைவிட அதற்குப் பின்னரே தேசத்தில் காங்கிரஸ் மகா சபையினுடைய செல்வாக்கு விரிந்து பரவலாயிற்று. ஹோம் ரூல் கிளர்ச்சியினிடமும் இந்திய மக்களின் கவனம் இந்திய அரசியல் விடுதலையினிடமும் முதன்மையடைந்தது. மகாத்மா காந்தி யவர்களின் தலைமையில் ஒத்துழையா இயக்கம் வீறுகொண்டு எழுந்ததினின்றும் காங்கிரஸின் செல்வாக்கு அதிகரிக்கத் தக்கபடி வளர்ச்சியடைந்தது.

பதிற் றடையில்லை. மகாத்மாஜியவர்கள் காங்கிரஸின் தலைமையை ஏற்பதற்கு முன்வரையில் காங்கிரஸ் மகாநாடு என்றால் ஏதோ இந் நாட்டிலுள்ள பெரிய படிப்பாளிகளும், வக்கீல்களும், உதவிச் சம்பளம் பெறும் பெரிய உத்தியோகஸ்தர்களும் ஆகிய ஒரு சிலர் கூடி நடத்தும் கூட்டமாகவிருந்தது. அக்காலத்தில் நடுத்தரமான இந்திய பொது மக்களும், தொழிலாளரும், பிற எளியோர்களும் காங்கிரஸில் கலந்தவர்களல்லர். அம் முறையை மாற்றித் தேசிய மகா சபை யென்றால் பலதிறப்பட்ட இந்திய மக்கள் அனைவரும் கூடிய பொது ஸ்தாபனமென்று பொருள்படும்படி செய்த பெரும் பேறு ஒப்பற்ற இந்தியாவின் பெருந் தலைவராகிய காந்தியடிகளார்க்கே உரித்தானதாகும். ஒவ்வொரு ஆங்கில வருடக் கடைசியிலும் டிசம்பர் மாதத்தில் இத் தேசிய மகாநாடு ஆண்டுக்கோரிடமாக ஒவ்வொரு முக்கிய நகரத்தில் கூடிவருகிறது. அது சமயம் நம் தேசத்திலுள்ள பற்பல மாகாணங்களிலிருந்தும் இந்திய மக்கள் ஏராளமாக அம் மகா சபைக்கு விஜயம் செய்கின்றனர். இந்தியாவில் தலைசிறந்து விளங்கும் தேசாபிமானிகள் பலரும் அங்கே ஒருங்கு கூடுகின்றனர். சில ஆண்டுகளாகத் தேசியக் கைத்தொழில் பொருட் காட்சிகள் போன்ற அமைப்புகளும் ஏற்படுத்தப்படுகின்றன. இந் நிகழ்ச்சிகளைக் காண வேண்டி ஆயிரக்கணக்கான மக்கள் குழுமுகின்றனர். இவையனைத்துஞ் சேர்ந்து ஒரு பெரிய தேசியத் திருவிழாவாகவே ஒவ்வொரு வருஷமும் இக் காங்கிரஸ் நடைபெறுகிறது.

## காங்கிரஸ் அமைப்பு

இத்தகைய காங்கிரஸின் 42-வது மகாநாடு சென்ற 1927 டிசம்பர் 26, 27, 28 தேதிகளில் டாக்டர் அன்சாரியவர்களின் தலைமையின் கீழ் சென்னையில் நடைபெற்றது. அம் மகாநாட்டைக் காண வேண்டி யானும் ஒரு பிரதிநிதியாகச் செல்லும் பாக்கியத்தை இம் முறை பெற்றேன். சென்ற ஆண்டுகளைவிட, இம் முறை சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாடு பல வகைகளில் முதன்மை யடைந்திருந்ததோடு, பிரதிநிதிகளும் பிறரும்



1-5961

ஏராளமாக விஜயம் செய்திருந்தார்களென்று பல பெரியோர்கள் சொல்லிக்கொண்டனர். காங்கிரஸ் மகாசபை கூடுவதற்கும், அம் மகாநாட்டுக்கு வரும் பிரதிநிதிகளும் பிறரும் தங்குவதற்கும் விஸ்தாரமான இட வசதி வேண்டுமல்லவா? அதற்காகச் சென்னையில் எழும்பூரைச் சேர்ந்த ஸ்பர்டாங் என்ற ஏரியின் மைதானத்தில் வேண்டிய கொட்டகைகளும், விடுதிச் சாலைகளும் ஏராளமாக அமைத்திருந்தனர். முதலில் நாம் சென்றவுடன் நம் முன்னிலையில் காங்கிரஸ் மகாநாடு கூடும் திலகர் மண்டபம் என்ற பெரிய பிரதானமான கொட்டகையும், அதன் வாயிலும் கண்களைக் கவர்ந்தன. மகாநாட்டுக் கொட்டகை கீற்றுக்களால் வேயப்பட்டிருந்தது. சுற்றும் தேசியக் கொடிகள் வெகு அழகாகத் தொங்கவிடப்பட்டிருந்தன. கொட்டகையின் உட்புறத்தில் ஆயிரக்கணக்கான பிரதிநிதிகளும், விசிட்டர்களும் அமருவதற்கேற்ற விசாலமான இடம் காணப்பட்டது. தலைவர்கள் உட்காருவதற்கேற்ற ஒரு நீண்ட மேடையும், அதற்கு முன்புறத்தில் சபையில் … பேசுப்பவர் ஏறிநின்று பேசுவதற்கேற்ற ஒரு உயர்ந்த … மேடையும் அமைக்கப்பட்டிருந்தன. உபந்நியாசிப்பவரின் வார்த்தைகள் எல்லோருக்கும் செவ்வனே கேட்கும்படி கொட்டகையின் … முழுவதும் ஒலிபரப்புக் கருவிகளையமைத்திருந்தனர். பிரசங்க மேடையின் முன்னர் மகாத்மாஜியவர்களின் பெரிய உருவப் படம் … கொட்டகையிலிருந்த தூண்கள் ஒவ்வொன்றிலும் தேச பக்தர்கள் பலருடைய படங்களும் அழகாக அமைக்கப்பட்டிருந்தன. … பக்தியை எழுப்பத்தக்க தேசிய வாக்கியங்களும் ஆங்காங்கே எழுதப்பட்டிருந்தன. நாற்புறமும் மின்சார விளக்குகளும், விசிறிகளும் தொங்கிக்கொண்டிருந்தன. மாகாண வாரியாகப் பிரதிநிதிகளும், ஸ்திரீ பிரதிநிதிகளும் அமருவதற்குத் தனித்தனியே இடம் அமைக்கப்பட்டிருந்தது. இது போன்ற மற்றும் பல அமைப்புகளைக் காணக் கூட்டங் கூட்டமாக ஜனங்கள் வந்து கொண்டிருந்தனர். இம் மகாநாட்டுக் கொட்டகையைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் பிரதிநிதிகள் தங்குவதற்கும், மகாநாட்டுச் சம்பந்தமான பிற காரியாலயங்களுக்கும், பத்திரிகையாசிரியர்கள் புத்தக

கள் முதலிய வற்றிற்குமாக வரிசை வரிசையாகக் கொட்டகைகள் ஏராளமாகப் போடப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீதிக்கும் ஒவ்வொரு பெயருமிடப்பட்டிருந்தது. பிரதிநிதிகளுக்கு வேண்டிய பலவித சௌகரியங்களும் நன்கு கவனிக்கப்பட்டிருந்தன. விளக்குகள், தண்ணீர்க் குழாய்கள், கடைகள், சாப்பாட்டு விடுதிகள், மல ஜலம் கழிப்பதற்கேற்ற வசதிகள் ஆகிய அனைத்துங்கூடி அஃது ஒரு சிறிய நகரமாகவே தோன்றியது. அதை முன்னிட்டே அவ்விடத்திற்குக் காங்கிரஸ் நகர் என்று பெயரிடப்பட்டிருந்தது. தென்னிந்திய இரயில்வே அதிகாரிகள் காங்கிரசுக்கு வருவோரது சௌகரியத்தை முன்னிட்டு காங்கிரஸ் நகருக்கு அருகாமையில் காங்கிரஸ் நகர் என்ற பெயரால் ஒரு புதிய ஸ்டேஷனைத் தற்காலிகமாக ஏற்படுத்தியிருந்தனர்.

## பொருட் காட்சி

அங்கே [illegible]ஸ் மகாநாட்டுடன் காங்கிரஸ் நகரில் அகில இந்திய கைத[illegible]ல் விவசாயப் பொருட் காட்சியையும் இம்முறை ஏற்படுத்[illegible]ந்தனர். காங்கிரஸ் நகர் இரயில்வே நிலையத்திற்கு[illegible] விஸ்தாரமான வெளியில் பொருட் காட்சிக் கொட்டகைகள் பலவித[illegible]கைகள் இத்துடன் [illegible] இருந்தன. அங்கு விவசாய சம்பந்தமானவும், கைத்தொழில் சம்பந்தமானவும் பலவிதப் பொருள்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. அயல்நாட்டுப் பொருள்களும், யந்திர நிர்மாணங்களும் [illegible]மயமாகப் பரவிக் காணப்பட்டன. நமது தேசியத் தொழிலில் முக்கியமாகக் கூறக்கூடியன மர வேலைகள், பிரம்பு வேலைகள், சித்திர வேலைகள், சிற்ப வேலைகள், பட்டு நூல் எடுத்தல், [illegible]யம் தோய்த்தல், தீக்குச்சி தயாரித்தல், மட்பாத்திரங்கள், நூல் [illegible]ன்னல், தோல் பதனிடுதல், முதலியனவாகும். சில இந்தியக் கம்பெனிகளும், ஆங்கிலக் கம்பெனிகளும் தத்தம் பொருள்களை அழகாக அமைத்திருந்தன. அரசாங்கத்தைச் சேர்ந்த [illegible] இலாகா, விவசாய இலாகாதாரர்கள் தத்தம் இலாகாக்களுக்குச் சம்பந்தப்பட்ட பல [illegible] சமைத்திருந்தனர். மைசூர்



மின்சார வேலைத் திட்டத்தை நிரூபிக்கும் பான்மையில் ஒரு செய்குன்றை யேற்படுத்தி அதன்மீது ஏரியை யமைத்து அதினின்றும் விழும் நீர் வீழ்ச்சியிலிருந்து மின்சாரச் சக்தியைத் தயாரித்து, அதனால் வண்டித்தொடரை நடத்தவும், விளக்குகள் முதலிய சாதனங்களை யமைக்கவும் செய்யும் மாதிரியொன்றை அமைத்திருந்தது ஒரு அரிய காட்சியாயிருந்தது. இவற்றையடுத்துக் கத்தர் கண்காட்சித் தனியாக ஏற்படுத்தப்பட்டிருந்தது புகழ்தற்குரிய தேயாம். அங்கு, கையால் நூற்று நெய்த ஆடைகளிலும் இவ்வளவு உயர்வானவை யிருக்கின்றனவா என்றையுறும்படி பலவித துணிகள் காணப்பட்டன. கத்தர் இயக்கம் எவ்வளவு தூரம் வன்மை யடைந்திருக்கிறதென்பது அங்கேதான் யாவருக்கும் புலனாயிற்று. இக்கத்தர் கண்காட்சியை 25 தேதியில் மகாத்மாஜியவர்கள் திறந்து வைத்தார்கள். அச்சமயத்தில் அவர் கூறிய கருத்துக்கள் தேசாபிமானம் படைத்த ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கனவாயிருந்தன.

## பிரதிநிதிகள்

இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் காங்கிரஸுக்குப் பிரதிநிதிகள் ஏராளமாக வந்திருந்தனர். அவ்வம் மாகாணவாரியாக அவர்களுக்கு வசதிகள் ஏற்படுத்தப் பட்டிருந்தன. ஸ்திரீ பிரதிநிதிகளும் பலர் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. வந்திருந்த பிரதிநிதிகளில் ஆந்திரர்களே அதிகமாக யிருக்கக்காணப்பட்டனர். யாவரும் கத்தருடையே தரித்திருந்தார்களாயினும் ஆலைத் துணிகளும், அயல்நாட்டு வஸ்திரங்களும் காங்கிரசுக்குள் புகாமலில்லை. தேசிய மகாநாட்டில் கத்தரையன்றி பிற வஸ்திரங்களைக் காணுவது அருமையாயிருக்குமென்று எதிர்பார்த்த எனது கண்கள் ஏமாற்றமடைந்தன. ஆனால் சென்னை மாகாணத்தை விடுத்து அயல் மாகாணங்களிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளிடையில் கத்தரையன்றி வேறு வஸ்திரங்களைக் காண்டல் அருமையாகவே யிருந்தது. இவ் வித்தியாசத்திற்குக் காரணம் காங்கிரஸ் அதிகா

சப் பதவிகளைச் சென்ற வருடத்தில் வகித்து வந்தவர்களும், சென்னையில் இம் மகாநாட்டை முன்னின்று நடத்தியவர்களுமாகிய சென்னைத் தலைவர்களின் மனப்போக்கின் மாறுதலேயாமென்று ஒருவர் சமாதானங்கூறினார். கத்தர் கண்காக்ஷியொன்றைத்தவிர்த்து காங்கிரஸ் நிகழ்ச்சிகள் அனைத்திலும் இவ்வருஷம் கத்தரைப் பற்றிய ஒரு விஷயமும்-ஆலோசனையும்-காணப்படவில்லை. கிராம புனருத்தாரணத்தைப் பற்றியும், ஏழை இந்தியர்களைப் பற்றியும் சிந்திப்பதற்கு இம்முறைக் காங்கிரஸ் மறந்தே போய்விட்டதென்பதிற் சந்தேகமில்லை. தேச பக்தி மேலீட்டால் காங்கிரஸ் நிகழ்ச்சிகளைக் காணவேண்டி வந்து குழுமிய ஏராளமான ஏழை ஜனங்கள் ரூ 10, 15, 20 என்ற பெருந்தொகைகளைச் செலுத்தி டிக்கட் பெற சக்தியற்றவர்களாய் காங்கிரஸ் கொட்டகையின் வெளிப்புறத்தில் நின்று தவித்த காட்சி எம்மனத்தை வருத்தியது. காங்கிரஸ் கொட்டகைக்குள் இடவசதி இருந்தும் சிறிதும் கட்டண விகிதத்தைக் குறைத்து ஏழைமக்களை உள்ளே பிரவேசிக்க ஒரு முறையாவது அனுமதிக்காமற்போனது விசனிக்கத்தக்கதே. பொதுவாக இம்முறைக் காங்கிரஸ் பணக்காரர்களின் காங்கிரஸாக நடைபெற்றதென்று பலரும் பேசிக்கொண்டதில் உண்மையில்லாமலில்லை.

## மகாநாடுகள்

இத்தடவைச் சென்னையில் காங்கிரஸ் மகாநாட்டுடன் பல்வேறு மகாநாடுகளும் நடைபெற்றன. அவற்றுள் கிலாபத் மகாநாடு, முஸ்லிம் கல்வி மகாநாடு, ஆஸ்திகர் மகாநாடு, ஆசார சீர்திருத்த மகாநாடு, பத்திராசிரியர் மகாநாடு, புத்தகாலய மகாநாடு, ஸ்திரீகள் மகாநாடு, இளைஞர் மகாநாடு முதலியன முக்கியமென்னலாம். காங்கிரஸ் நடைமுறையில் கிடைத்த ஒழிவு நேரங்களிலெல்லாம் மேற்படி மகாநாடுகள் பலவும் ஆங்காங்கே நடைபெற்றன. எந்த வருடத்திலுமில்லாதபடி இவ்வருடம் காங்கிரஸின் காரணத்தால் வந்து திரண்ட மக்களால் சென்னையில் எங்கும் ஒரே அமளியாயிருந்தது. எங்கே பார்த்தாலும், மகாநாடுகள்! எங்கே நோக்கினாலும் மகாநாட்டுப் பிரதிநிதிகள்! எப்பக்கம்



கேட்டாலும் மகாநாட்டின் பேச்சுக்கள்! பல மகாநாடுகளும் ஒருங்கு சேர்ந்து பத்திரிகைகளின் இடங்களைப் போட்டியுடன் முழுதும் கவர்ந்து நின்றன. ஆயினும் அவற்றுள் சில மகாநாடுகள் தக்க அமைப்பும், ஒழுங்கும், முறையான பிரதிநிதித்துவமுமின்றி நடைபெற்றன என்பதைக் கூறாமலிருக்க முடியவில்லை. ஏனெனில் காங்கிரஸ் மகாநாட்டின் பொருட்டு வந்து கூடிய முக்கியஸ்தர் ஒரு சிலரே ஆங்காங்கு கூடி வெவ்வேறு மகாநாடுகளின் பெயரால் சில உபந்நியாசங்களும், சில தீர்மானங்களும் இயற்றிப் பத்திரிகைகளின் இடங்களை நிரப்பினார்களன்றி, பொது மக்களுக்கு ஒவ்வொரு மகாநாட்டிலும் போதிய பிரதிநிதித்துவமில்லையென்பதை எடுத்துக்கூறத் துணிகின்றேன். உதாரணமாகப் புத்தகாலய மகாநாடு, பத்திராசிரியர் மகாநாடு முதலியவற்றை எடுத்துக்கொள்ளுவோம். பொதுவாகத் தேசத்தை வேண்டாம் சிறப்பாகச் சென்னை மாகாணத்தையே கவனிப்போம். இம் மாகாணத்தில் எத்தனையோ புத்தகாலயங்களிருக்கின்றன; எத்தனையோ பத்திரிகைகளிருக்கின்றன. அவையனைத்திற்கும் மேற்படி மகாநாடுகளில் போதிய பிரதிநிதித்துவமுண்டா என்று வினவுகிறேன். ஏதோ காங்கிரஸுக்குச் சம்மந்தப்பட்டு வந்திருந்த புத்தகாலயக்காரரும், பத்திராசிரியரும் ஒரு சிலர் கூடிக்கொண்டு பெயரளவில் மேற்படி மகாநாடுகளை நடத்தி முடித்தனர். இக்குறைகளுக்குக் காரணம் முக்கியமாக ஒவ்வொரு மகாநாட்டையும் நடத்துவதற்குத் தனித்தனியாக நிர்வாக சபைகள் தோன்றி, நாட்டில் போதிய அளவு பிரசாரஞ்செய்து, அவ்வம் மகாநாடுகளைத் தனித்தனியாகத் தக்கபடி பிரதிநிதிகளைக்கூட்டி நடத்தாமற் போவதேயாம். இவ்விதம் பற்பல மகாநாடுகள் கூடியபடியால் முக்கியமான காங்கிரஸ் மகாநாட்டின் நிகழ்ச்சிகளில் பொது மக்கள் தங்கள் முழு கவனத்தையும் செலுத்த முடியாமற் போனதும் வாஸ்தவமே. காங்கிரஸ் மறைவில் நடத்தப்படுவதால் சில மகாநாடுகளுக்கு அவற்றின் முக்கியமும் வெளிப்படாமற் போகிறது. எனவே எப்படியும் ஒவ்வொரு மகாநாடும் முறைப்படி தக்க பிரதிநிதித்துவம் வாய்ந்ததாயிருக்க வேண்டுமென்பதே எனது முடிவாம்.

## காங்கிரஸ் மகாசபை

26 தேதி காங்கிரஸ் மகாசபை ஆரம்பமாயிற்று. தேசியத் தலைவர்கள் பலரும் பெருத்த ஆரவாரத்துடன். தொண்டர் படைகள் புடைசூழ ஊர்கோலமாகக் காங்கிரஸ் மண்டபத்திற்கு விஜயம் செய்தார்கள். சபையில் கரகோஷம் வானத்தைப் பிளந்தது. தலைவர்கள் பலரும் மேடைமீது அமர்ந்தனர். ஸ்திரீ பிரதிநிதிகள் ஒருபுறமும், மாகாண வாரியாக வந்திருந்த (ஆபீஸர்) பிரதிநிதிகள் பலரும் முறையே மற்றப் பக்கங்களிலும், அவர்களை வரையுஞ்சுற்றி விசிட்டர்களும் அமர்ந்திருக்கவும், ஒரேவிதமான வெள்ளைக் கதருடை தரித்து தொண்டர்கள் பலரும் வரிசை வரிசையாக ஆங்காங்கே நின்று ஒழுங்கைக்காத்து நிற்கவும் கண்ட காட்சி எம்மனத்தை உருகச்செய்தது. காங்கிரஸ் தலைவரின் அழைப்புக்கிணங்கி ஜஸ்டிஸ் கக்ஷித் தலைவர்களும், சுயேச்சைக் கக்ஷிக்காரரும், நம் மாகாண மந்திரிகளும், பார்லிமெண்டு தொழிற் கக்ஷிப் பிரதிநிதிகளிருவரும் பிறரும் மகாநாட்டுக்கு வந்திருந்தது மகிழ்ச்சிக் குரியதாயிருந்தது. ஆரம்பத்தில் தேசிய கீதங்கள் பாடப்பட்டபின் பின் வரவேற்புச் சங்கத்தலைவர் திரு முத்துரங்க முதலியார் அவர்கள் பிரதிநிதிகளையும், தலைவர்களையும் வரவேற்று ஓர் அரிய பிரசங்கஞ்செய்தார். அவரது பிரசங்கத்தில் கக்ஷி ஒற்றுமை, சைமன் கமிஷன் பகிஷ்காரம் முதலிய விஷயங்கள் முதன்மையாயிருந்தன. பின்னர் மகாநாட்டின் தலைவர் டாக்டர் அன்சாரியவர்கள் காங்கிரசுக்குத் தலைமை வகித்துத் தமது அக்கிராசனப் பிரசங்கத்தைப் புரிந்தார். அதில் பல தேசிய விஷயங்களைப்பற்றிப் பிரஸ்தாபித்து ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையைப்பற்றியும், சைமன் கமிஷன் பகிஷ்காரத்தைப் பற்றியும், மிகவும் வற்புறுத்தினர். பின்னர் விஷயாலோசனைக் கமிட்டியில் உருவாக்கப்பட்ட சில தீர்மானங்கள் மகாநாட்டில் முடிவுசெய்யப் பட்டபின் பின்னர் ஜயகோஷங்களினிடையே மகாநாடு அன்று கலைவுற்றது.



பின்னர் மற்றிரண்டு நாட்களும் மகாநாடு முறையேகூடி பல தீர்மானங்கள் செய்து முடித்தது. ஒவ்வொரு தீர்மானத்தைப் பற்றியும் மகாநாட்டில் அதைப் பிரேரேபிப்பவரும், ஆதரிப்பவரும், ஆமோதிப்பவருமாக தேசியத் தலைவர்கள் பலரும் அவ்வவ் விஷயத்தையொட்டி வெகு உருக்கமான பிரசங்கங்கள் புரிந்தனர். அவர்களில் பண்டித மாளவியா, டாக்டர் அன்னி பெஸண்டு, சரோஜனிதேவி, ஷியாம சுந்தர சக்கிரவர்த்தி, பண்டித ஜவஹரிலால்நேரு. புருசு சாமபமூர்த்தி, டி. பிரகாசம், மஹம்மதலி, ஸ்ரீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, ஜே. எம். சென்குப்தா, பட்டாபி சீதாராமய்யர், நிம்புகர் முதலியவர்களை முக்கியமாகக் குறிப்பிடலாம். மகாத்மா காந்தியடிகளார் மகாநாட்டு நிகழ்ச்சிகளில் தமது தேகநிலையின் காரணத்தாற் கலந்துகொள்ள முடியாமற் போயினும் முதல்நாள் மகாநாட்டுக்கு எழுந்தருளித் தமது ஆசியை மகாநாட்டுக்குத் தந்தருளினர்.

## தீர்மானங்கள்

காங்கிரஸ் மகாநாட்டில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்கள் பலவாயினும் அவற்றுள் சாயல் கமிஷன் பகிஷ்காரம், ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை, பூரண தேசிய சுதந்தரம், பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரம் ஆகியவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம். பார்லிமெண்டு மகாசபையில் சமீபத்தில் இந்திய அரசியல் நிலைமைகளை விசாரித்தறிவதற்காக நியமிக்கப்பட்ட சாயல் கமிஷனில் இந்தியர் ஒருவரையேனும் நியமிக்காமல் விட்டதோடு, அவ்விதம் நியமிக்காமல் விட்டதற்கு லார்ட் பர்க்கென்ஹெட் கூறிய சமாதானம் இந்தியரின் மனத்தை ஒருங்கே புண்படுத்தியிருக்கிறது. இந்தியாவெங்கும் பலதிறப்பட்ட கக்ஷியார்களும் இராயல் கமிஷனை பகிஷ்கரித்துப் பேசிக்கொண்டிருக்கின்றனர். இந்தியாவின் முழு கவனமும் ராயல் கமிஷனிடத்தில் இன்று பதிந்து நிற்கிறது. இவ்வமயத்திற் சென்னையிற்கூடிய காங்கிரஸின் கவனத்தைக், கந்-

தரியக்கம், கிராம நிர்மாணம் போன்றவற்றின் மீதுசெல்ல வொட்டாமல் பெரும்பாலுமே ராயல் கமிஷன் விஷயம் ஈர்த்து நின்றதில் அதிசயமொன்றில்லை. ஆயினும் மகாத்மாஜீ யவர்கள் கூறுகிறபடி பொறுப்பற்ற தன்மையில் காங்கிரஸ் நிர்வாகிகள் சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தமின்றி சிலவிஷயங்களில் நடந்துகொண்டது வருந்தத்தக்கதேயாம். அதற்கு, பிரிட்டிஷ் சாமான்களை பகிஷ்கரிக்க வேண்டுமென்று தீர்மானித்த இக்காங்கிரஸின் ஆகாவிலேயே சமீபத்தில் ஏற்படுத்தப்பட்ட பொருட்காக்ஷியில் பிரிட்டிஷ் சாமான்களே முதன்மையடைந்திருந்தன வென்றால் இதைவிட வேறு உதாரணங் கூறவேண்டுமா? நிற்க பல காரணங்களாலும் நிறுத்தப்பட்ட ஒற்றுமையா மியக்கத்தை ராயல் கமிஷன் நியமனத்தின் காரணமாக மீண்டும் நாட்டில் புதுப்பிக்க இஃது ஒரு நல்ல சமயமாகையால் அதைப்பற்றிக் காங்கிரஸ் கவனிக்குமென்று எதிர்பார்த்திருந்த தேசிய வாதிகள் பலரும் ஏமாற்றமடைந்து பேசிக்கொண்டதைப் பலவிடங்களில் கேள்விப்பட்டேன். அநேகமாகத்தற்போதிய காங்கிரஸ் அதிகாரிகள் அனைவரும் வாய்ப்பேச்சுகளாலும், காகிதத் தீர்மானங்களாலுமே அரசியல் சுதந்தரத்தைச் சாதித்து விடலாமென்று எண்ணிக்கொண்டிருப்பதாக உண்மைத் தேசாபிமானியொருவர் என்னிடங்கூறினார். ஒற்றுமையா இயக்கம் போன்றவற்றில் தலையிட்டுப் பல கஷ்டங்களை ஏற்றுத் தேசத்தொண்டுபுரியும் ஆற்றல் இல்லாத வாய்ப்பேச்சு வீரர்களாகிய பணக்காரரிடத்தில் தற்போது காங்கிரஸ் அடிமையாகி நிற்கிறதென்றும், ஆகவே அவ்வடிமை வாழ்க்கையினின்றும் தேசிய மகாநாட்டை முதற்கண் மீட்டு அதற்குச் சுதந்தரமும் வழங்க வேண்டிய பொறுப்பு இந்தியப்பொதுமக்களிடத்திலிருக்கிறதென்றும் அன்னார் கூறினார். அவ்வார்த்தைகளில் ஏதேனும் உண்மை அடங்கியிருக்கிறதா வென்பதை வாசகர்களைத் தீர்மானிக்கவிட்டு விடுகின்றேன். "குறிப்பிட்ட ஒரு சில தலைவர்களின் அபிமானத்திற்குப் பாத்திரமானவர்களுக்கன்றி மற்றையோருக்குப் பிரசங்க மேடை யேறுவதற்கோ, பேசுவதற்கோ அனுமதியளிக்கப்படவில்லை"யென்று ஒருதலைவர் குறை கூறிக்கொண்டிருந்தார். கடையில் தமிழ்நாட்டுத் தலைவர்களில் தலை சிறந்தவராகிய திரு. வி.

க



கலியாண சுந்தரர், சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார் போன்ற மற்றுஞ்சிலரை காங்கிரஸ் பிரசங்க மேடைமீது எதிர்பார்த்த எனது கண்கள் ஏமாற்றமடைந்தது மாத்திரம் உண்மையென்று யான் உறுதி கூறமுடியும்.

## தொண்டர்கள்

இச்சா சேவகர்களாகச் சேர்ந்து பலதிறப்பட்ட காங்கிரஸ் தொண்டுகளையாற்றி நின்ற தேசாபிமானம் படைத்த வாலிபர்களினுடையவும், பெண்களுடையவும் உற்சாகம் பெரிதும் பாராட்டத் தக்கதே. ஆயினும் காங்கிரஸ் பணிகளைப் பணிவுடனாற்றுவதற்கெனப் போந்த காங்கிரஸ் தொண்டர்கள் தங்கடமையினை மறந்து பிரதிநிதிகளையும் பிறரையும் கடுமையான முறையில் பரிசோதித்தும், அடக்கியதிகாரம் செலுத்தியும் நடத்திய அமுலைக்கண்ட போது நான்மிக வருந்தினேன். இக் குறையைப்பற்றி மற்றும் பலர் பிரஸ்தாபித்தனர். இன்னும் இதையொட்டிய பிற நிகழ்ச்சிகளையும் சாவதானத்துடன் கவனித்துவர நினைத்தேனாயினும் திடீரென்று எனது உடல் அசௌக்கிய முற்றதால் விரைவில் ஊருக்குத் திரும்பிவிடலாயினேன்.

மொத்தத்தில் இம்முறை, காங்கிரஸ் மகாநாடு நாகரிகத் துறையில் விமரிசையாகவும், விநோதமாகவும் ஒரு தேசியத் திருவிழாவாகச் சென்னையில் நடந்த தென்பதே எனது முடிவாகும். தேசிய மகாநாடு மூன்று தினங்கள் மாத்திரமே நடைபெற்றதென்றாலும் அதற்கு முன்னும் பின்னும் சில தினங்கள் வெவ்வேறு மகாநாடுகள் மும்முரமாக நடைபெற்றபடியால் டிசம்பர் மாதக் கடைசி வாரம் முழுவதுமே சென்னையில் விழாவாக விருந்ததெனக்கூறலாம். இத்துணைச்சீரும் சிறப்புமாகக் காங்கிரஸ் நடைபெற்றதற்குக் காரணராயிருந்து உழைத்த சென்னைத் தலைவர்களின் உழைப்புப் பெரிதும் பாராட்டற் பாலதேயாம்.

என். வேங்கடரமணன்.

# ஏலத்தைப் பிடித்திருக்கும் தொத்து நோயைப் போக்கும்வழி.

---

## (ஓர் சம்பாஷணை.)

இடம்:— தெருத்திண்ணை.

கதிர்காம கவுண்டர்:— தம்பி! தோட்டத்திலிருந்து எப்பொழுது வந்தீர்கள்?

பொன்னழகர்ஸ்வாமி செட்டியார்:— இரண்டு மூன்று நாளாகும் ஐயா!

கதிர்:— என்ன விசேடம்? உட்காருங்கள்; செடிகள் நன்றாயிருக்கின்றனவா? பலன் எப்படி?

பொன்:— இவ்வாண்டு பலன்தான் எல்லாருக்கும் தெரிந்தது தானே, பூச்சியத்திலும் பூச்சியம். எதிர்பார்த்தது கிடைக்கவில்லை வரவு செலவுக்குக்கூடக் கட்டிவராது. செடிகளுடைய நிலைமையோ நான் என்னசொல்லட்டும்.

கதிர்:— உட்காருங்கள் தம்பி! கொஞ்சம் இருங்கள், என்ன எப்படியிருக்கிறது சொல்லுங்கள் என்ன பரிகாரம் தேடலாமென்று நினைக்கின்றீர்கள்? பாண்டியில் உள்ளதையெல்லாம் திரட்டி உருட்டி பலையில் போட்டுவிட்டு உட்கார்ந்திருக்கிறோம். என்னசெய்யலாம்?

பொன்:— இதோ, இருக்கிறேன். ஏல விவசாயிகள் அண்டையயல் நாடுகளிலுள்ள நவீன விவசாய முறைகளைப் போயறிந்து வாயியலாது போயினும், அங்கங்கே வெளியாகும் பத்திரிகைகள், கிரந்தங்கள், துண்டுப் பிரசுரங்கள்



முதலியவைகளையாவது வரவழைத்துப் பார்த்துச் செடிகளுக்குள் காணப்படுகிற இக்கொடிய தொத்துநோயைத் தடுக்க வழி தேடாதிருப்பார்களேயானால், உறுதியாக அவர்கள் போட்ட பணம் சமுத்திரத்திலெறிந்த பொன்னே போலாகுமென்று நான் ஒரே முடிவாய்ச் சொல்கிறேன். இது நிச்சயம்.

கதிர்:— அவ்வளவு மோசமாக நீங்கள் சொல்லாதீர்கள். இன்னும் எத்தனையோ தோட்டங்களில் கரும்பைப் பழித்த பச்சைப் பசேலென்று செடிகள் நன்றாய் நிலைத்து நிற்கின்றன.

பொன்:— இருக்கலாம்; அதை மறுக்கமுடியாது. ஆயினும், ஒரு கிராமத்தில் ஒரு பிராந்தியத்தில் ஒருவனுக்குத் தொத்துநோய் பிடித்தவுடன் தகுந்த தடுக்கு முறைகளால் அதை நசுக்க முடியாத பக்ஷம், பின்னால் அப்பக்கம் பூராவும் அக்கொள்ளைநோய் தீப்பற்றினாற்போல் பரவி ஜனங்களை மடியச்செய்யும்; அதைத் தாங்கள் நேரில், பிரத்யக்ஷத்தில் கண்டு தெரிந்திருப்பீர்கள். அதுகொண்டு தொத்துநோயைப் போன்று தீவிரமாய்ச் செடி கொடி மரங்களுக்கிடையில் தோன்றும் இவ்வியாதி ஏலச்செடியை மட்டுமல்ல இன்னும் அருகுகிற்கிற தாவரங்களையும், சொல்லப்போனால் நமது உணவுப் பொருள்களைப் பயக்கும் பயிர்களுக்குள்ளும் விரைவில் பாய்ந்துவிடுமென்று நீங்கள் நினையுங்கள். நமது ஏலச் செடியைப்பற்றியுள்ள வியாதியைப் போன்று, அனேகமாய் அதேயென்று சொல்லும்படியான ரீதியில் ஐரோப்பா நாடுகளிலுள்ள பல செடி கொடி மரங்களிலும் தொத்தியிருப்பதை முன்னாலேயே, அந்த உற்சாகமுள்ள மனிதர்கள் கண்டுபிடித்துத் தகுந்த சிகிச்சையும் கொடுத்துப் பெரிதும் பலனை யனுபவித்து வருகிறார்கள்.

கதிர்:— இதென்னையா! வேடிக்கையாயிருக்கிறது. மற்ற செடி கொடிகளுக்கும் மரத்திற்குங்கூட இந்நோய் பிடிக்கிறதென்று சொல்கிறீர்கள்! நாங்கள் தலைமுறை தத்துவமாக ஏலத்தோட்டத்தில் பாட்டன் முப்பாட்டன் காலந்தொட்டு வேலைசெய்து வந்திருக்கிறோம். ஊர் நாட்டிலுள்ள பண்ணைத் தோட்டங்களிலும் திரிந்து வேலை செய்கிறோம். நாங்கள் கண்டது ஒன்றுமில்லை. நீங்கள் கனாக் கண்டதைப்போல் பேசுகிறீர்கள். நூதனமாயிருக்கிறது" யென்றுசொல்லித், தெருவில் போய்க்கொண்டிருக்கும் நடராஜபிள்ளையைக்கூப்பிட்டு, "ஐயா, அவசரமில்லாவிடில் சிறிது இப்படி உட்காருங்கள்" என, அவர் கேலியாய்ச் சிரித்துக்கொண்டே, தம்பி 'சொல்றதைக் கொஞ்சம் கேளுங்கள்"

நடராஜ:— சிரித்துக்கொண்டே "என்ன விசேடம்? தம்பி என்ன சொல்லுகிறார்? அவர் படித்ததை ஒப்புவிப்பார். அவ்வளவுதானே! அதற்கு மேலே ஏட்டுச் சுரக்காய்"

பொன்:— ஐயா! நீங்கள் கண்ணியம் வாய்ந்த பல பெரியவர்களிலொருவர், வயதிலும் முதிர்ந்தவர் என்பதை மறந்துவிடாதீர்கள். ஏதோ நானறிந்தவளவில் சிலவற்றைச் சொல்ல முன்வந்தேன்; அது என்னுடைய முக்கியமான கடமைகளிலொன்றாகும். நான் தெரிந்ததை என் சகோதரர்களுக்கும் சொல்லித்தான் தீரவேண்டியிருக்கிறது.

கதிர்:— சொல்லுங்கள் தம்பி. ஓகோ! அவர் என்னமோசொன்னதொன்று வருத்தப்படுகிறாப்போல் தெரிகிறதே

பொன்:— இல்லை, இல்லை; அப்படியொன்றும் இல்லை. ஐயா! நான் சொல்லுகிறதைக் கேளுங்கள். பிரிட்டிஷ் தீவுகளிலுள்ள சில தாவரங்களில் இதைப் போன்ற



ஒரு தொத்துவியாதி கொஞ்ச காலத்திற்கு முன் ஆரம்பித்தது. உதாரணமாக அயர்லந்து தேசத்தைமட்டும் எடுத்துக்கொள்வோம். அயர்லந்திலுள்ள விவசாய இலாகாக்காரர் நம்முடைய இலாகாதாரரைப் போல் சும்மாயிருப்பதே சுகமென்ற கொள்கையுடையவர்களில்லை. மேலும் அயர்லாந்து குடியானவர்கள் நம்மைப் போன்று வாளா யிருக்கிறவர்களுமல்ல. அந்தந்த நாடுகளில் விவசாயத் துறையில் எவ்வளவு தூரம் மேம்பாடடைந்து வருகிறார்களென்பதை நம்மவர்க்கு எடுத்துக் காட்டித்தான் தீரவேண்டியிருக்கிறது. அதன் முழு விபரமும் இப் பத்திரிகையில் பின்னால் தொடர்ச்சியாக எழுதவே நான் ஆசைப்படுகிறேன். இப்பொழுது தாவரங்களில் காணும் வியாதிகளைப் பரவவொட்டாது தடுக்கும் முறைகளை ஒவ்வொரு தேசமும் எவ்வளவு தூரம் கையாடி வருகிறதென்பதை எடுத்தாராயப் புகுவோம். 1845இல் பிரிட்டன் தீவுகளில் உருளைக்கிழங்கு சாகுபடியில் நம் ஏலச் செடியைப்பற்றி யழிக்கும் பெருவாரியைப் போன்று ஒருவித நோய் உண்டாகிப் பயிரைச் சேதப்படுத்தியது. 1875–1885 காலவளவில் இலங்கையிலுள்ள காப்பித் தோட்டங்களைத் தாக்கித் தோட்டக்காரர்களை வெருளச்செய்தது. 1906-ல் ஐயர்லாந்தில் (Celery) என்ற ஒரு வகைத் தோட்டக் கீரையில் தொத்தி, விஸ்தீரணமான சாகுபடி பூமிகளை நஷ்டப்படுத்தியது. 1911-ல் விக்டோரியாவில் உருளைக்கிழங்கு சாகுபடியேயில்லாது போய்விடுமென்று சொல்லும்படி கரநோய் பாய்ந்துருக்கியது. சொல்லப்போனால் எல்லாத் தேசங்களிலும், முக்கியமாக ஒரே சாகுபடியைக் கையாடிவரும் பெரிய விஸ்தீரணமுள்ள பூமிகளிலும் இவ்வியாதி முதலில் லேசாய்த் தோன்றிப், பின் தடுக்க முடியாத வண்ணம் கொள்ளைநோயாகத் தாவரங்களை யழித்து வருகிறது. இந்தக்

கொடிய தொத்து வியாதியினால் ஒவ்வொரு தேசத்திற்கும் பெருந்த பொருளாதாரம் குறைவுபட்டு, வருடந்தோறும் லட்சக் கணக்கான டாலர்கள் குடியானவர்களுக்கும் தோட்டக்காரர்களுக்கும் ஏற்பட்டு வருகிறதென்று அமெரிக்கர்கள் சொல்கிறார்கள்.

கதிர்:— சரி தம்பி; இதெப்படி உண்டாகிறது?

பொன்:— ஐயா, செடிகளுடைய விரோதிகள் பல. வரிசைக்கிரமமாகச் செடிகளுக்கு உபத்திரவம் செய்கிற அனைத்தையும் எடுத்தெழுதினால் மலை யகராதியை யவமத்துப் பருமனிலும் பேரிலும் கூடுதலாகவே விளங்கும், அந்தோ! பூமியில் எறிந்த விதையையே பங்கப்படுத்தும் பூச்சிகள் அநேகம். வேர் கிழங்கைத் தின்று உஜ்ஜீவிக்கும் புழுக்கள் அபரிமிதம். இலை, தண்டுகளை மேய்ந்து அவாரம்போடும் பூச்சிகளும், புழுக்களும் எண்ணிறந்தவைகள். காய் கறி பழம் வித்தைத் தின்று தொலைக்கும் ஜீவ செந்துக்கள் அளவுக் கடங்காதவைகள். இவைகளையெல்லாம் இலகுவில் அழிக்க ஏற்பாடுகள் பல இருக்கின்றன. ஆனால், இவைகளுக்கெல்லாம் கூடுதல் வேகத்துடனே தாவரங்களை நசித்து வருகிறதும் கண்ணுக்குத் தெரியாமல் ஒழி மறைவிலிருந்து வேலைசெய்கிறதொன்றுண்டு. அந்தோ! இது ஒவ்வொரு தேசத்திலுள்ள விவசாய மேதாவியையும் மலைக்கச் செய்துகொண்டு நிற்கிறது. அதுதான் (Fungi) ஆம்பி அல்லது காளான் என்று சொல்லப்படுவது. நாம் மழையிலும் அதி நுட்பமான சில சிறு நுண்ணிய தண்டுகளையுடைய இவ்வாம்பியை அணுதரிசினியைக்கொண்டு பார்க்கலாம் நிறத்தில் வெள்ளையானது. பெரிதும் பூசனம் பூத்ததென்று சொல்லலாம். தாவரங்களின் வளர்ச்சிக் காதாரமான பச்சைச்சத்து (Chlorophyll) அவைக



ளில் கிடையா. அதுகொண்டு ஆம்பி தன் பக்கத்தே நிற்கிற உயிர்த் தாவரங்களிலாவது, கெட்டுப்போனவைகளின் மூலமாவது தான்பற்றி, அதின்மூலம் ஜீவிக்க வழிதேடுகிறது. உயிருள்ள தாவரங்களைத் தொத்தி ஜீவிப்பதற்குப் புல்லுருவி (Parasites) என்றும், கெட்டு அழுகிப்போனவைகளைப் பற்றி யுறுஞ்சுபவைகளுக்குச் சாப்ரோபைட்ஸ் (Saprophytes) என்றும் தாவர சாஸ்திரிகள் கணித்திருக்கின்றனர்.

கதிர்:— சரி இது எப்படிப் பரவுகிறது?

பொன்:— (Fungi) ஆம்பி அபரிமிதமான பல சிறு (Spores) நுண்ணியவித்துக்களை உண்டாக்குகின்றது. காற்று, மழைத் தண்ணீர், தேனீ, பூச்சி, புழுக்கள், சொல்லப்போனால் மனிதர்கள் மேலிலும் உடையிலும் பற்றிக்கொண்டு பல வேறிடங்களுக்குக் கொண்டுபோகப் படுகின்றன.

கதிர்:— எந்தச் சந்தர்ப்பங்களில் இவைகள் பரவுகின்றன?

பொன்:— பிளேக்கைப்போன்று இதைச்சொல்லலாம். கசிவுள்ள நீர்த் தாவளங்களிலும், நிழல் கட்டான இடங்களிலும், பயிர்கள் நெருக்கடியாயிருக்கிற இடங்களிலும், சீதோஷ்ணஸ்திதி சமமாயிருக்கிறபோது வியாதி மிகுதியாகப் பரவுகிறது. வெயில் மும்முரமாகக் காயும்போது தொத்து தடைபடுகிறது என்று விவசாய மேதாவிகள் கண்டு பிடித்திருக்கின்றனர்.

கதிர்:— இது எவ்விதம் பெருவாரியாக மாறுகின்றது?

பொன்:— ஐயா, இதை நன்றாய்க் கவனியுங்கள். ஒரே வேளாண்மை எங்கே மிகுந்து நிற்கிறதோ, பக்கச் சாகுபடிகள் (அதாவது துணைச்சாகுபடிகள், மாற்றுச்சாகுபடிகள்) எந்தப் பூமியில் கையாளமுடியாதோ அந்தப் பிரா

ந்தியங்களில் இவ்வியாதி நாளடைவில் கொள்ளை நோயாகமாறிப் பலத்த சேதத்தை உண்டுபண்ணுகிறது.

கதிர்:— வியாதி பற்றியதென்று எப்படிக் காண்கிறது? தம்பி, எனக்கு இன்னும் வியாதிச்செடியே தெரியாது!

பொன்:— ஐயா, வியாதி முதலாரம்பத்தில் கண்டுபிடிக்க வேண்டுமானால் நமது கண்ணுக்குப் புலப்படாது. பாக்கெட் லென்ஸைக்கொண்டு கண்டு கொள்ளலாம். வியாதி பற்றிய கொஞ்ச காலத்திற்குப் பின்னென்றால் நன்றாய்க் கண்ணுக்குப் புலப்படும். ஒரு இலையை எடுத்து வெயிலுக்கு எதிரே பிடித்துப்பாருங்கள், அதில் க்ஷேமத்தைக் காட்டக்கூடிய முழு பச்சையில் ஊடே சில சிறு கறுப்புப் புள்ளிகள் காணப்படும். நாளாக நாளாக அப் புள்ளிகள் எண்ணிக்கையிலும் வண்ணத்திலும் நிறத்திலும் அதிகரித்து மாறுபாடடைகின்றன. பக்கத்திலுள்ள இலை, தண்டு, குருத்துக்களாலும் புள்ளிகள் விழுந்து ஒன்றுடனொன்று கலக்க ஆரம்பிக்கிறது. அப்படிப்பற்றிய வியாதிச்செடி குஷ்டரோகியைப் போன்று சாதாரணமாய் கண்ணுக்குத் துணுக்கமாய்த் தெரியவரும். வியாதி பற்றிய ஓரிரண்டாண்டுகளுக்குள் ஒரே தடையின் முதல் தண்டு 10, 12 அடி உயரத்திலும் மற்ற பற்றிய தடைகள் 2, 3, 4 அடிகளிலும் இருக்க எத்தனையோ பார்க்கலாம்.

கதிர்:— ஆமய்யா! இனி என்னென்ன தடுக்குமுறைகளைக் கையாளுகிறார்கள்? அதைச் சொல்லுங்கள்.

பொன்:— பூச்சிகளினாலுண்டாக்கக் கூடிய நஷ்டத்திற்குச் சாவகாசமாக எடுத்துப் பேசலாம். இப்பொழுது ஆம்பியைப் பொறுத்தமட்டிலும் மற்ற தேசங்கள் கையாளும் முறைகள் பல. அவற்றுள்:—



I. ஒவ்வொரு தேசத்தினுடைய சர்க்காரும் குடியானவனுடன் ஒத்துழைக்கிறார்கள். உதாரணமாக, அயல் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகக்கூடிய விதைப் பண்டங்கள் விவசாயக் கருவிகள் முதல்கொண்டு சர்க்காரால் பரிசீலனை செய்யப்பட்டதின் பின்னரே குடியானவர்களுக்கு அனுப்பப்படுகின்றன. வியாதியைப் பொறுத்த சட்டங்கள் அநேகம் கண்டிப்பான அமுலிலிருக்கின்றன. உள்நாட்டில் ஒரு குடியானவன் இன்னொரு குடியானவனிடத்திலிருந்து 'விதைகள் நல்லவைகள், வியாதி பற்றாதவைகள்' என்ற சர்க்கார் உறுதிமொழியில்லாத வித்துப் பண்டங்களை விலைகொடுத்து வாங்கக் கூடாது. இதுபோன்ற இன்னும் அநேகம் சட்டத்திலிருக்கிறது.

II. ஒரே சாகுபடியை எக்காலத்திலும் எவ்விடத்திலும் தொடர்ந்து நிறுத்தக்கூடாது, பயிர் மாற்றம் வேண்டும் அல்லது தரிசு கிடக்கவிடவேண்டும்; தவறினால் மாற்ற முடியாத இடங்களில், பரவு நோயிருக்கிற இடங்களில் அடியில் கண்டபடி செய்யவேண்டும்.

a வியாதிபற்றிய செடியை வேரோடு களைந்து பிடுங்கி மண்ணெண்ணெயை அல்லது பெட்ரோல் எண்ணெயையூற்றி பக்கத்திலுள்ள சருகுமுதல் யாவற்றையும் சேர்த்து எரிக்கவேண்டும்.

b பின்னர் பூமியைச் சிறிது கிளறி இலேசாகச் சுண்ணாம்புப் பொடிகளைத் தூவவேண்டும்.

c தெரிந்தெடுத்துப் பிரித்த விதைகளை (Compound Microscope) என்ற திராவகத்தில் பரீட்சித்துப் பார்க்கவேண்டும்.

d தரையில் பின்னால் விழுந்த இலை சருகுகளைக் களையெடுக்கும்போதெல்லாம் புரட்டிக் கொண்டிருக்கவேண்டும்.

e பின்னர் வியாதி தலைகாட்டாமலும் பரவ வொட்டாமலும் செய்ய Bordeaux of Burgundy Mixture அல்லது Livcr of Sulphur ஐ செடிகளின்மேல் வருடத்திற்கு 3 அல்லது 4 முறை பிச்சாங்குழல்கள் மூலம் தெளிக்கவேண்டும். இவைகள் தற்காலிகமாக வேனும் அனுஷ்டித்துப் பார்ப்பார்களேயானால் மிக விரைவில் உண்மைகண்டு நோயைத் தொலைத்துவிட முடியும்.

கதிர்:— இதெல்லாம் யார்செய்யப் போகிறார்கள்?

பொன்:— சங்கமும், சங்கத்தின் தலைவர்களும் இதைச் செய்யத் தூண்டவேண்டும். அல்லது ஒரு 10 ஏக்கராத் துண்டு நிலத்தையாவது விலைக்கு வாங்கிப் பரீட்சார்த்தமாகச் செய்து காட்டவேண்டும். சங்கத்தின் வருமானங்களை வியாதியைத் தொலைப்பதற்காகவே பெரும்பாலும் உபயோகப்படுத்தவேண்டும். நிற்கிற நிலைமை-அஸ்திவாரத்தை உறுதியாய்ப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும். பின்னால் இரண்டாவதாக மற்றவைகளைக் கவனிக்க வேண்டும்.

கதிர்:— எங்கே ஒன்றும் நடவாது! இப்போது இருக்கிற நிலைமையில்.

பொன்:— "ஐயா, சிறு சிறு தோட்டக்காரர்களைக் கொஞ்சம் நஷ்டப்படுத்துகிறதுடனே பெரிய தோட்டக்காரர்கள்—லட்சம் லட்சமாக மலையில் பணம் போட்டிருக்கிறவர்கள்—வருடந்தோறும் 30,000, 40,000 ரூபாயாக வரவு வருகிற சீமான்கள் வியாதிக்குத் தகுந்த பரிகாரந்



தேடிக்கொள்ளாது போனால், தமக்கு முறைகளை உடனே இந்நிமிடமே கையாளாது போனால், ரொம்பவும் பெருவாரிநோய் கொள்ளையடிக்கும் என்பதை அவர்கள் மறந்து போகவேண்டாம். மதுரை ஜில்லாவிலுள்ள வியாபாரிகளும், ஜமீன்தாரர்களும், நிலச்சுவான்தாரர்களும், வருமானவரி போடுகிறவர்களும் இப்போது ஏலக் குடியானவனைக்கண்டு மலைத்து நிற்கிறார்கள். ஐயா! அம்மலைப்பே நமது பெருமையென்று இப்பொழுது ருசிபார்த்துக் கொண்டிருக்கும் நமது தலைவர்கள் உடனே வேலையிலிறங்குவார்களாக. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் கௌரவத்தையும் கண்ணியத்தையும் காப்பாற்றிக் கொள்வார்களாக. பின் சந்ததியார்கள் எள்ளி நகையாடாதபடி தற்காத்துக் கொள்வார்களாக. பெயரும், புகழும், செல்வமும் ஒருங்கேயடைய இந்த நல்ல சமயத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து முயற்சிப்பார்களாக" என்று சொல்லவும், அவ்விருவரும் இந்த நல்ல விஷயத்தை யுணர்ந்தவர்களாய், ஏகோபித்து இருவரும் பொன்னழகர் சாமி செட்டியாரைப் பார்த்து, "தம்பி! அவஸ்யம் நாங்கள் இந்த முறையை அனுஷ்டிக்கிறோம்" என, அவ் வாலிபர் அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு சமீபத்தில் சந்திப்பதாகச் சொல்லிச் சென்றார்.

S. வடிவேல்,
சூப்பிரண்டு, பொன்முடி.

# புல் தைலம்

## (Lemon Grass Oil)

இந்தியாவின் தொழில்களை அபிவிருத்திசெய்ய நாம் உத்தேசித்தால், இந்தியாவின் நன்மையையே முக்காவும் மூன்றுதடவை நாம் கவனிக்கவேண்டும் என்பது என்னுடைய உறுதியான அபிப்பிராயம். இந்தியாவில் கிடைக்கும் மூலப் பொருள்களை உபயோகிக்கவேண்டியது என்னுடைய அபிப்பிராயத்திற்கு முதல் காரணம். தொழில்களை ஏற்படுத்தவேண்டியது இரண்டாவது காரணம். தொழில்களால் உண்டாகக் கூடிய லாபம் இந்தியாவிலேயே தங்கி இருக்க வேண்டுமென்பது மூன்றாவது காரணம்.

ஸர் பிரிட்ரிக் நிக்கல்ஸன்.

விவசாயமும், கைத்தொழிலும், வியாபாரமுமே ஒரு நாட்டின் சிறப்பிற்கு அத்யாவஸ்யக சாதனங்கள். தேசத்திற்கு வேண்டும் பொருள்களுக்காக தேசத்தின் விளை பொருள்களைக்கொண்டு உற்பத்திசெய்வதே கைத்தொழிலாம். இத்தொழிலின் அபிவிருத்திக்கு முக்கியமாக விளை பொருள்களாகிய மூலப் பொருள்களுடன் மூலதனம், தொழிற் கல்வி, பொதுஜன ஆதரவு, அரசாங்கத்தின் உதவி, வியாபார சுதந்திரம், உழைப்பு முதலியவைகள் சேர்ந்தாலன்றி, கைத்தொழில் அபிவிருத்தியடையாது. விவசாயமே இந் நாட்டில் முதன்மையான தொழிலாயிருக்கிறது. உலகில் உயர்ந்த மூலப்பொருள்கள் விளைவதில் அநாதிகாலம் முதற்கொண்டு இந்நாடே கீர்த்தி பெற்றிருக்கிறது. தேசத்தில்



சீதோஷ்ண ஸ்திதி தக்கவாறிருப்பதால், கைத்தொழிலுக்கு வேண்டிய புல், பூண்டுகளும், எண்ணெ வித்துக்களும், மருந்திற்காகவேண்டிய பற்பல செடி, வேர் வகைகளும் இன்னும் அநேக சாமான்களும் ஏராளமாக உண்டாகின்றன.

ஆதிகால முதற்கொண்டு இந்தியா தன் கைத்தொழிலில் நல்ல பெயர் பெற்றுவந்தது. கிறிஸ்து பிறப்பதற்கு 2,000 ஆண்டுகளுக்கு முன்பு எகிப்து தேசத்தில் கோரிகளில் அடக்கம் செய்யப்பட்ட சவங்களின்மீது இந்தியாவில் நெய்யப்பட்ட அதி நேர்த்தியான சல்லாக்கள் சுற்றப்பட்டிருந்ததற்கும் அத்தாட்சிகளிருக்கின்றன. எவ்வளவோ காலத்திற்கு முன்னிருந்து இந்திய ஆடைகள் நெய்யும் தொழிலில் நிகரற்று விளங்கிய தென்பதற்கு எவ்வித சந்தேகமும் கிடையாது. பெரிய கஷ்டங்களையும் அபாயங்களையும் தாங்கிக்கொண்டு அயல்நாட்டு வியாபாரிகளை இந்நாட்டுக்கு வரும்படி கவர்ச்சித்தது இந்தியத் துணிகளின் நேர்த்தியேயென்று சரித்திராசிரியர் மர்ரே சொல்லுகிறார். மொகலாய சக்கிரவர்த்தி ஔரங்கசீப், ஆஸ்தான மண்டபத்தில் அமர்ந்திருக்கும் தருணத்தில் அவருடைய புத்திரி உடம்பு தெரியும்படியாக உடுத்திக்கொண்டு அங்கு வந்ததற்காக அவர் கோபிக்கவே, தான் ஆடையின்மீது ஆடையாக ஏழு உடைகள் உடுத்தியிருப்பதாகச் சொல்லித் தன் தகப்பனரைச் சாந்தப் படுத்தினாராம். அக்காலத்து டெக்கா மஸ்லின் மிகவும் பேர்பெற்றது. இந்தியாவில் செய்யப்பட்ட சாமான்கள் ரோம் நகரில் ஏராளமாக விற்கப்பட்டு, ரோம் ராஜ்யத்தின் செல்வம் வருஷா வருஷம் ஏராளமாக வடிகட்டப் பட்டதென பிளினி என்பவர் கூறி வருந்துகிறார்.

டேரியஸ், அலெக்சாந்தர் முதலிய அரசர்களுக்கு அநேகம் கப்பல்கள் இந்தியாவிலேயே கட்டப்பட்டன. இந்தியக் கப்பல்கள் ஆப்பிரிக்காவிற்கும் அமெரிக்காவிற்குங் கூடப் போய்விட்டு வந்தன. சுமத்திரா, ஜாவா, போர்னியோ, பாலி முதலான தீவுகளுக்கும் இந்நாட்டுக் கப்பல்கள் சென்று வந்தன. அத் தீவுகளில் இந்தியர்கள் குடியேறி இருந்ததால் கப்பல் போக்குவர

அடிக்கடி நடந்தது. அங்கு இந்திய நாகரீகம் அடியோடு அழியாது இன்னுமிருக்கிறதாகச் சமீபத்தில் அங்கு சென்று ஆராய்ச்சி செய்துவந்த அறிஞர் காளிதாஸ் நாக் சொல்லுகிறார். கி மு. 2,000 வருடங்களுக்கு முன்னிருந்தே உலகின் முக்கிய தேசங்களுடன் கப்பல்களில் இந்திய பண்டங்களைக் கொண்டுபோய் இந்தியா வியாபாரம் செய்ததென்று ஆசிரியர் மாக்ஸ் டங்கன் அறிவிக்கிறார்.

இரும்புத் தொழிலிலும் இந்தியா பிரஸித்தி பெற்றிருந்தது. டில்லி நகருக்குச் சமீபத்திலிருக்கும் குட்டுப் என்ற 1500 வருடங்களுக்கு முன்புசெய்து வைக்கப்பட்ட கம்பமும், புரியிலுள்ள பிர்மாண்டமான இருப்பு உத்திரங்களும், சோமநாத புரத்திலிருக்கும் விசித்திரத் தலைவாசல்களும், நர்வார் என்ற இடத்திலுள்ள 24 அடி நீளமுள்ள இரும்புப் பீரங்கியும் இந்தியாவின் பண்டை எஃகுத் தொழிலுக்குச் சாட்சிகளாக விருக்கின்றன. மிக்க பேர்போன டமாஸ்கஸ் கத்திகளைச் செய்வதற்கு இந்தியாவிலிருந்து தான் எஃகு கொண்டுபோகப்பட்டது. எஃகுத் தொழில் சமீபத்திலிருந்துதான் இங்கிலாந்தில் உண்டாகி யிருக்கிறது. ஆனால் இந்தியாவிலோ? புராதன காலத்திலிருந்து இந்தியர்களுக்கு இத்தொழில் தெரியும். உள் நாட்டுத் தேவைகளுக்குக் கொடுத்ததுமன்றி அயல் நாடுகளுக்கும் இந்தியா ஏற்றுமதி செய்தது.

இன்னும் கண்ணாடி செய்தல், சாயம் போடுதல், சிற்பவேலை, தச்சுவேலை, பொன்வேலை முதலியவேறு பல தொழில்களுக்கும் பாதகண்டம் பிரசித்தி பெற்றதாயிருந்தது. அநேக அன்னிய நாட்டார்களைப் பாரத தேசத்திற்கு இழுத்தது இந்நாட்டு வாசனைத் திரவியங்களும் கைத் தொழில்களுமே என்று கூறுவதில் எவ்வித எதிர்ப்புமில்லை.

லண்டனிலிருக்கும் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார்கள் இந்தியாவுடன் வியாபாரம் செய்யுமாறு சாசனமொன்று எலிஜபெத் ராணி அவர்களிடம் 1600-௵த்தில் பெற்றார்கள். இவர்கள்



இந்தியாவிற்கு வந்து பண்டகசாலைகள் கட்டி, வியாபாரம் செய்து கொண்டு, சுதேச மன்னர்களுடன் சேர்ந்து, உள் நாட்டுக் கலகங்களில் பிரவேசித்துப் பின் எந்த நாளிலிருந்து இவர்கள் வரி வசூலிக்க ஆரம்பித்தார்களோ அந் நாள்முதல் இந்தியக் கைத் தொழில்கள் க்ஷீணிக்க ஆரம்பித்தன. கம்பெனிக்குப் புதிதாகக் கிடைத்துள்ள அதிகாரத்தின் மூலமாக இந்தியாவின் கைத் தொழில்களை நசித்துப்போகும்படி செய்ய ஆரம்பித்தார்கள். நமது மூலப் பொருள்களெல்லாம் இங்கிலாத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இங்கிருந்து மூலப் பொருள்கள் அங்கு கொண்டுபோகப்பட்டு மறுபடியும் அவைகள் அங்கிருந்து பல்வேறு ரூபங்களாகச் செய்யப்பட்டு இரட்டிப்புக் கடல் தீர்வையோடு பலவித செலவுகளுடன் இந்தியாவிற்கு வந்ததால், வருகிறதால் இந்தியாவின் கைத் தொழில்கள் நசுக்குண்டு போனதுமன்றி, பிரிட்டிஷ் சாமான்களின் இறக்குமதியும், இந்தியாவின் மூலப் பொருள்களின் ஏற்றுமதியுமே இந்தியாவில் வறுமை வருவதற்குக் காரணம்.

தொழில்கள் கெடவே தொழிலாளிகளும் விவசாயத்தில் இறங்கியதால், விவசாயிகள் அதிகமாகப் பெருகினார்கள். தேசத்தில் அதிகமான ஜனங்கள் விவசாயம் ஒன்றையே நம்பிக்கொண்டிருந்தபடியால், பஞ்சங்கள் அடிக்கடி தோன்ற ஆரம்பித்தன. இங்கு 1800 ௵த்திலிருந்து 1825 ௵த்திற்குள் 5 பஞ்சங்கள் உண்டாயின. 1826௵ முதல் 1850௵ வரை 2 பஞ்சங்கள் வந்தன. 1851௵ முதல் 1875௵ வரை 6 பஞ்சங்கள் தோன்றின, 1876௵ முதல் 1901௵த்திற்குள் 18 பஞ்சங்கள் வந்தன. இவைகளெல்லாவற்றிலும் தாது௵ உண்டான பஞ்சமே மகா கொடிது. 1854௵ முதல் 1901௵ வரையில் 2 கோடியே 88 லட்சம் பிரஜைகள் இந்தியாவில் க்ஷாமத்தால் இறந்துபோனார்களென்று ஸ்ரீமான் டிக்பி அறிவிக்கிறார்.

1877–78ம் வருஷத்திய பஞ்சத்திற்குப் பின்பு பஞ்சத்தைப் பற்றி விசாரித்து அறிவிக்கும்படி ஒரு சபையைச் சர்க்கார் நியமித்தார்கள். அக் கமிஷனர்கள் அவர்கள் அறிக்கையில் ஓரிடத்தில் அறிவிக்கிறார்கள்:—

> ஜனங்கள் அநேகமாக விவசாயத்தையே நம்பி யிருப்பதாலும், வேறு தொழில் எதுவும் இல்லை யாகையாலும் பஞ்சம் உண்டானால் ஜனங்களுடைய கஷ்டத்தை நிவர்த்தி செய்வது வெகு சிரமமாக இருக்கிறது. வழக்கப்படி மழை பெய்யாவிட்டால் ஜனங்கள் கொடுக்கக்கூடிய விலைக்கு அவர்களுக்கு வேண்டிய சாமான்கள் அகப்படாமல் போவதுடன், அவர்களுக்கு வேலையும் கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகையால் விவசாயம் தவிர வேறு தொழில்களை விருத்தி செய்வதுதான் இந்நிலைமைக்குப் பரிகாரமாகும்.

> இந்தியாவிலுள்ள ஜனங்கள் தரித்திரத்திற்கும், பருவ மழை தவறிப் போய்விட்டால் அவர்களுக் கேற்படும் கஷ்டங்களுக்கும் மூலகாரணம் என்னவென்பதை ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். அதாவது விவசாயம் ஒன்றே ஜனங்களின் தொழிலாக இருப்பதுதான். பலவேறு தொழில்களை உண்டு பண்ணினாலொழிய இந் நிலைமைக்குப் பரிகாரம் ஏற்பட மாட்டாது. அப்படி உண்டு பண்ணினால் விவசாயம் செய்வதற்கு அவசியமான ஜனங்கள் போக, பாக்கி ஜனங்கள் கைத் தொழில்களில் அமர்ந்து ஜீவனம் சம்பாதிக்கும்படி செய்யலாம்.

கிளைவ் இந்தியாவிற்குப் புறப்பட்டுப் போன 1756 வருஷத்தில் 74 கோடியே 575 லட்சம் பவுன் பிரிடிஷ் கவர்ன்மெண்டுக்குக் கடன் இருந்தது. அதற்கு வட்டி 27 லட்சம் 53 ஆயிரம் பவுன் கொடுக்கப்பட்டு வந்தது. 1815 வருஷத்தில் இந்தப் பெரிய கடனானது 86 கோடியே 40 லட்சம் பவுனாகி விட்டது. இந்தியாவிலிருந்து திரண்ட செல்வம் சென்றதின் பயனாக இந்தப் பிரமாண்டமான கடன் தீர்ந்தது. இச்செல்வ நிலைக்குப் பின்பே இங்கிலாந்தில் தொழில் புரட்சி ஏற்பட்டது. இங்கிலாந்து ஏற ஏற இந்தியா கீழே வர ஆரம்பித்தது.



கைத் தொழில்கள் கெட்டுப்போய் இந்தியா வெறும் விவசாய தேசமாவதற்குத் தகுந்த காரணங்களிருக்கின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் மூலப் பொருள்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கத்தார் அளிக்கும் ஆதரவும், புதுப்புதுத் தொழில்களைக் கண்டுபிடித்து வேண்டியவைகளைச் செய்து, தொழிலபிவிருத்தி செய்வதற்குச் சர்க்கார் உதவ முன் வராமலிருப்பதுவும், தொழிற் கல்வி போதிக்காமலிருப்பதும் கவர்ன்மெண்டு செய்திருக்கும் தவறுதல்களென்று எப்படிச் சொல்லாமலிருக்க முடியும்! இது விவசாய தேசமாக மாறிய பின்னரும் விவசாயமும் உற்சாகிக்கப்படவில்லை. இந்தியா இப்பொழுது உலகம் பூராவுக்கும் சணல் கொடுத்து உதவுகிறது. பருத்தி உற்பத்தியில் உலகத்தில் இந்தியா இரண்டாவதாக இருக்கிறது. அயல் நாடுகளுக்கு அதிகமாகவே அனுப்பும்படியாக அவ்வளவு அதிகமாக எண்ணெய் வித்துக்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. உலக விளைவில் 100-க்கு 40-பங்குத் தேயிலை இந்தியாவில் விளைகிறது; கரும்பும் ஏராளமாக விளைகிறது. அவுரி, ரப்பர், சம்பார வர்க்கங்கள், மசாலைச் சாமான்கள் இங்கு ஏதேஷ்டமாக உண்டாகிறது.

இவைகளைத் தவிர்த்து நமது நாட்டில் விவசாயக் கைத் தொழில்கள் (Agricultural Industries) பல செய்வதற்குச் சாதனங்களிருக்கின்றன. பட்டுப் பூச்சி வளர்த்தல், அரக்கு உண்டாக்கல், தேன் சேகரித்தல், மர எண்ணெய் உற்பத்தி செய்தல், வெண்ணெய் எடுத்தல், எரு தயாரித்தல் புஷ்பங்களை வளர்த்தல், பன்னீர் செய்தல், அத்தர் எடுத்தல், பிசின் செய்தல் கர்ப்பூரம், சாம்பிராணி செய்தல், பெருங்காயம், குங்கிலியம், மட்டிப்பால் முதலியவை எடுத்தல், புல் தைலம், சந்தனத் தைலம் இறக்குதல், அநேக வகை விதைகளிலிருந்து எண்ணெய் எடுப்பது, பழங்களிலிருந்து ரசம் எடுப்பது, கருவாடு தயார் செய்வது, கோழி, ஆடு, மாடு வளர்த்தல், மருந்துச் செடிகளை உற்பத்தி செய்தல், நார்களை உற்பத்திசெய்து கயிறு திரித்தல், தானிய

வகைகளைமாவாகச் செய்தல் ஆகிய இன்னும் இவைபோன்ற அநேக விவசாயக் கைத் தொழில்களும், குடிசைத் தொழில்களும் நமது தேசத்தில் செய்யலாம்.

அரசாங்கத்தின் உதவியை நம்பி இங்கு எத்தொழிலையும் செய்யமுடியாது. உயர்தரக் கலாசாலைகளிலும், சர்வ கலாசாலைகளிலும், செத்துப்போன பாஷைகளும், தவறுதலான புராதன சரித்திரங்களும், உபயோகமற்ற சாஸ்திரமும், மூளையே கெட்டுப் போகும்படியான அவ்வளவு கஷ்டமான கணித சாஸ்திரமும், தத்துவ சாஸ்திரமும் மாணவர்களுக்கு—வாலிப இந்தியர்களுக்குப் போதிக்கப் படுகின்றன. நமது நாட்டில் தொழிற்கல்வி சிறிதுமின்றி, நம்மை அடிமைவாழ்வில் ஆழ்த்தும் அனுவசியக் கல்வியே மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. இக் கல்வியே குமாஸ்தாக்களை சிருஷ்டிக்கிறது. இப்பொழுது இக்கல்வியின் பயனாகவே படித்தவர்களிடையில் வேலையில்லாத் திண்டாட்டம் உண்டாகியிருக்கிறது. இந்தியாவில் விவசாயக் கல்வி நன்கு போதிக்கப்படவில்லை. கைத்தொழில்கல்வி பள்ளிகளில் கற்பிக்கப்படவில்லை. ரசாயனக் கைத்தொழில் (Chemical Industry) போதிக்கப் படவில்லை. பள்ளிவிட்டு விலகியவுடன் வயற்றின்பாட்டுக்காக ஆதரவளிக்கும் கலைகள் புகட்டப்படவில்லை.

விவசாயம் உன்னதமடைந்தால் மட்டும் ஒரு தேசம் சிறப்படையாது. கைத்தொழிலும் முதன்மை பெறவேண்டும்; வியாபாரத்திலும் முக்கியமாக விளங்கவேண்டும். ஒரு மனிதனுக்கு வாதம், பித்தம், சிலேற்பன மென்ற மூன்று நாடிகளும் முக்கியமாயிருப்பதுபோல, விவசாயம், கைத்தொழில், வியாபாரம் ஆகிய இம் மூன்றும் ஒரு தேசத்திற்கு உயிர் நாடிகளாம். இவை ஒவ்வொன்றிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. உலகிலுள்ள அரசுகளில் கைத்தொழிலினாலன்றோ சில முன்னேற்றமடைந்து வல்லரசுகளாய் விளங்குகின்றன. ருஷியா-ஜப்பான் யுத்தத்திற்கு (Russo Japan War)ப் பின்பே ஐரோப்பாவில் பல தேசங்கள் கைத்தொழில் விஷயத்தில் முன்னேற்றமடைந்து, ஒவ்வொரு



தேசத்துச் சாமான்களை விற்கும் விஷயமாகப் போட்டியுண்டாகியதால், மகா ஐரோப்பிய யுத்தம் கிளம்பியதற்குக் காரணமென்று ஒரு அறிஞர் கூறுகிறார். இப்பொழுது அமெரிக்காவின் அதிதீவிரமான அபிவிருத்தியையும், ஜப்பானின் முற்போக்கையும் கவனியுங்கள், கவனியுங்கள். விவசாயிகளின் அறியாமையும், தரித்திரமும்; முதலாளிகளின் ஒற்றுமைப்பின்மையுமே நமதுகைத் தொழில் விருத்தியாகாததற்கு மற்றொரு பக்கத்துக்காரணங்கள். உபவிஷயமே மிக விரிவடைந்து விட்டபடியாலும், "ஏலவிவசாயி"யின் அடுத்த இதழில் நண்பர் ஸ்ரீமான் N. வெங்கட்டராமனவர்கள் "கைத்தொழில்" என்ற விஷயத்தைப்பற்றி எழுதப் போவதாலும், இம்மட்டிலும் இவ்வுப விஷயத்தைச் சுருக்கிவிட்டுப் புல் தைலத்தில் புகுவோம்.

## போதைப் புல் தைலம்.

திருவாங்கூர் மலையில் அநேக விவசாயக் கைத்தொழில்கள் செய்யலாம். இப்பொழுது இங்கு கூறப்புகுந்தது போதைப் புல் தைலமிறக்கும் விஷயமாகும். திருவாங்கூர் மலைகளிலும், அவைகளைச்சார்ந்த பிரிட்டிஷாருக்குச் சொந்தமான மலைகளிலும் போதைப் புல் ஏராளமாகவுண்டு. இன்னும் திருவாங்கூரில் தொடுபுழை, பருவூர், மாவேலிக்கரை, திருவல்லா, புனலூர் ஆகிய இடங்களைச் சுற்றி இது ஏராளமாக இருக்கின்றது. தேவிகுளம் டிவிஷனில் எவ்வளவு ஏராளமாயிருக்கிறதென்று ஏல விவசாயிகளுக்கு எடுத்துரைக்கத் தேவையில்லை. திருவாங்கூரில் தானாகவே உண்டாகிறது. எனினும் கடல் மட்டத்திற்கு 2,000 அடிகளுக்கு மேற்பட்ட இடங்களில் இது நன்கு வளருகிறது. தைலமிறக்கும் நோக்கத்துடன் போதைப் புல்லை எருவிட்டுக்கூடச் சாகுபடி செய்கிறார்கள். போதைப் புல், சாம்பிராணிப் போதை, கர்ப்பூரப்புல், வாசனைப்புல், இஞ்சிப்புல் என்ற வகைகள் போதைப் புல்லில் உண்டு. இத்தைல வகைகளில் சற்று வித்தியாசமிருப்பதாக கியூ ராஜாங்க தாவரத் தோட்டத்தின் (Royal Botanic

Gardens, Kew) தலைவர் அறிவிக்கிறார். விஷயங்களை விளக்கும் சௌகரியத்தின் பொருட்டு எல்லாப் புல் வகைகளையும் போதைப் புல் என்றும், தைலங்களைப் புல் தைலமென்றும் இதனடியிற் கூறுகிறேன்.

திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்களில் இந்தப் புல் தைலம் எடுக்கும் தொழில் நெடுங்காலமாக விருந்துவருகிறது. தைலத்திற்காகவே இலங்கையிலும் இது ஏராளமாகப் பயிரிடப்படுகிறது. மேற்கு இந்தியத் தீவுகள் (West Indies), பிரேஜில் (Brazil) முதலான தேசங்களின் புல் தைலங்களைக் காட்டிலும் இந்தியப் புல் தைலமே சிறந்தது. ஏனெனில் சாராயத்தில் (Alcohol) இது இலகுவாய்க் கரைகிறது. மற்ற தேசத்துப் புல் தைலமோ அப்படியில்லை.

திருவாங்கூரில் காயன்குளம், ஆலப்புழை முதலிய விடங்களில் இத் தைலமெடுக்கும் தொழிற்சாலைகளிருக்கின்றன. திருவாங்கூர் புல் தைலத்திற்கு லண்டன் சந்தை (London Market) யில் நல்ல பேருண்டு. அமெரிக்காவிலிருந்தும் திருவாங்கூருக்கு விலைகள் (Orders) வருகின்றன. இந்தத் தைலம் எடுக்கும் கைத்தொழில் திருவாங்கூரில் பழையதாயிருப்பதாலும், இந்தப் புல் ஏராளமாக உண்டாகிற நிலங்கள் திருவாங்கூரில் ஏதேஷ்டமாக இருக்கிறதாலும் திருவாங்கூருக்குப் பல விடங்களிலிருந்தும் இதற்கு நல்ல விலைகள் வருவதாலும், இங்கு இந்தத் தொழிலை விரைவில் விஸ்தாரமாக விருத்தி செய்யலாம்.

## செலவு

இந்தத்தொழில் செய்வதற்குப் பெரும்பணம் தேவையில்லை. கொஞ்சப்பணம் போதுமானது. சுமார் ரூ 2,000 செலவுசெய்து, இத்தொழிலை ஆரம்பிக்கலாம். சாதாரண நாட்டுவாலை வாங்கினால் போதுமானது. தூம நிராவகம் எடுப்பதைப்போலவே யிருப்பினும், இதற்கு வாலை பெரிதாய்வேண்டும். இந்த வாலைகளின்



மூலமாக எடுக்கும் தைலம் [illegible] ஆலப்புழை முதலான விடங்களில் தொழிற்சாலைகளிலுள்ள இயந்திரங்களின் மூலமாய் [illegible] எடுத்தால், நல்லவிலைக்கு விற்கலாம். பலபேர் பங்குசேர்ந்து ஒரு பெரிய கூட்டுக் கம்பெனியாக வைத்தும் நடத்தலாம்.

## ஏற்றுமதி

ஆண்டுதோறும் ரூ 4,80,000 பெருமான 12,000 காலன் புல் தைலம் சென்னையிலிருந்து ஏற்றுமதியாகிறது. இலங்கையிலிருந்து 1923 ஹுல் 142,019 பவுன் மதிப்புள்ள 15,00,000 பவுன் நிறையான தைலம் ஏற்றுமதி செய்யப்பட்டது. திருவாங்கூரிலிருந்து அடியிற்கண்டவாறு புல் தைலம் ஏற்றுமதி செய்யப்பட்டது.

| மலையாளம் ஆண்டு | பவுன் தூக்கம் | மதிப்பு ரூபாய் |
|---|---|---|
| 1088 | 3,28;092 | 16,40,460 |
| 1089 | 4,09,492 | 20,47,463 |
| 1090 | 2,79,900 | 13,99,502 |
| 1091 | 2,32,169 | 11,60,845 |
| 1092 | 1,73,661 | 8,68,305 |
| 1093 | 2,18,519 | 10,92,598 |

## விலை

அயல் நாடுகளில் ஒரு பவுன் தூக்கமுள்ள புல் தைலம் சுத்தத்திற்குத் தக்கவாறு ரூ 1—8—0 முதல் ரூ 8—0—0 வரை விற்கப்படுகிறது.

## உபயோகங்கள்

சோப்புகளுக்கு வாசனை கொடுப்பதற்காகவும், வாசனைத் திரவியங்கள் (Perfumeries) செய்வதற்காகவும், மருந்திற்காகவும் உபயோகப் படுத்தப்படுகிறது.

## முடிவு

நம் நாட்டில் அநேக மூலப்பொருள்கள் உபயோகிப்பாரற்று அப்படியே கிடக்கின்றன. மூலப் பொருளின் உபயோகங்களையும், அவைகளைச் சாஸ்திரீய முறையில் செய்து, பற்பல வகைகளாக உண்டாக்கும் வழிகளையும் நமது விவசாயிகள் அறியாமலிருப்பதாலும், பணக்காரர்கள் முதல்போட்டு கைத்தொழிலபிவிருத்தியில் முன்னணியில் வந்து வேலை செய்யாததாலும், பொது ஜனங்கள் கூட்டுத் தொழிலின் மர்மத்தை யறிந்து பலவகையில் ஐக்கியத் தொழில்கள் செய்யாததாலும், நம் தேசத்தில் கைத் தொழில்கள் தீவிரமாக விருத்தியடையவில்லையென்று இவ் வியாசத்தின் ஆரம்பத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

ஏல விவசாயிகள் ஏலத்தைத் தவிர்த்து நானாவித உப கிருஷிகளையும், உப தொழில்களையும் ஏல விவசாயத்துடன் செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது. உலகத்தின் எந்த பாகத்திலும் இவ்வளவு விஸ்தீரணமான இடம் பூராவும் ஏலக்கிருஷி செய்யப் படவில்லை. அநேக இடங்களில் இதை உப கிருஷியாகவே நடத்துகிறார்கள். நாம் இதை முக்கிய கிருஷியாகக் கொண்டபடியால், வேறு பற்பல உப விவசாயத்தையும் நடத்தலாம். ஏலத் தோட்டத்தினருகில் எத்தனையோ மூலப் பொருள்கள்—மறைப் பட்ட திரவியங்கள் நினைப்பாரற்றுப், பார்ப்பாரற்று, அனுபவிப் பாரற்று அப்படியே கிடக்கின்றன. நீங்கள் அவைகளிடத்தில் செல்லாவிட்டாலும், அவைகள் உங்களை வலுவில் கூப்பிடுங் காலம் வந்துகொண்டிருக்கிறது.

பிரிய ஏல விவசாயிகளே, ஏலக்காயின் மூலமாக வரும் மீதியான வருமானங்களை நகைகள் செய்வதிலும், வீண் விஷயங்களிலும் செலவு செய்யாதீர்கள்; அதிக வரும்படியுள்ளவர்கள் பேராசையுடன் பெருவட்டிக்குக் கொடுக்காதீர்கள். பணத்தைத் தக்கவாறு உபயோகித்தால், 1-க்கு 100-மடங்கு லாபம் கிடைக்கும். நமது மலைப் பிரதேசத்தில் பல வகையான கைத் தொழில்கள்



செய்வதற்கு வேண்டிய ஏதுக்களிருக்கின்றன. ஆகையால் கைத் தொழிலில் ஈடுபட்டு நீங்கள் உன்னத நிலைமை யடைவதோடு, அநேக ஏழைச் சகோதரர்களுக்குத் தொழில் கொடுத்து உதவிப் பொதுவாகத் தேசத்தின் செல்வத்தைப் பெருக்குங்கள்.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

# ஆசிரியர் குறிப்புகள்.

## ஏலம்.

கோச்சி

இங்கு காடுகளில் தானாகவே ஏலம் விளைகிறது. இச் சமஸ்தானத்தில் இதை அதிகமாகப் பயிர்செய்வோரில்லையென கிருஷி இலாகா சூப்பிரண்டு எனக்கு எழுதியிருக்கிறார்.

பம்பாய் ராஜதானி

இந்த ராஜதானியில் ரத்னகிரி டிவிஷனில் ஏலம் சிறிது விளைகிறதாகப் புனாவிலிருக்கும் விவசாய டைரெக்டர் அறிவிக்கிறார். ரத்னகிரி டிவிஷன் விவசாய டிப்டி டைரெக்டருக்கும் எனக்கும் கடிதப் போக்குவரவு நடந்து கொண்டிருப்பது முடிவடைந்தவுடன் இப்பகுதியில் தெரிவிக்கப்படும்.

இந்தியாவிலிருக்கும் பற்பல சுதேச சமஸ்தானங்களுக்கு எழுதிக் கேட்டதில் ஏலம் அங்கு விவசாயம் செய்யப்படுவதில்லையென அறிந்து அறிவிக்கிறேன். இதைப்பற்றி இன்னும் பல இடங்களுக்கு எழுதிக் கொண்டிருக்கிறேன்.

## அயல் நாடுகளில் ஏலம்

### இலங்கை (சிலோன்)

இத்தீவில் 7,000 ஏக்கருக்கு அதிகமாக ஏலம் பயிரிடப்படுகிறதென்று "ஏல விவசாயி" யில் வெளிவந்திருக்கிறது. இதைப் பற்றி இலங்கைத் தாவரத் தோட்டத்துச் சூப்பிரண்டு Mr. மாக்மில்லன் எழுதியிருப்பதை ஆசிரியரின் திரட்டு என்ற தலைப்பினடியில் மொழி பெயர்த்து இதில் வெளியிட்டிருக்கிறேன்.

### பிரிடிஷ் வடக்கு போர்னியோ

இப்பொழுதுதான் இங்கு கவர்ன்மெண்டு மாதிரித் தோட்டத்தில் ஒரு ஏக்கர் விஸ்தீரணத்தில ஏலக்கிருஷி புதிதாகச் செய்யப்பட்டிருக்கிறதாக அந்நாட்டு கிருஷி டைரெக்டர் எழுதியிருக்கிறார்.

### மலேயாவும் ஸ்ட்ரேயிட் செட்டில்மெண்டும்

செர்டாங் என்ற இடத்தில் சர்க்கார் சோதனைத் தோட்டத்தில் ஏலத்தைக் கிருஷிசெய்து பார்த்ததில் அந்நாட்டிற்கு ஏல விவசாயம் முற்றும் முடியாதெனக் கண்டறிந்ததாக விவசாய மந்திரி அறிவிக்கிறார்.

## மலையில் சந்தைகள் கூடவேண்டும்

சந்தைகளில் சகல ஜனங்களும் சௌரியமாகச் சாதாரண சாமான்கள் வாங்கலாம் என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். நமது மலைப் பிராந்தியங்களில் ஜனங்கள் அதிகமாக வாழும் மத்திய விடங்களில் சந்தைகள் ஏற்படுத்த தலைவர்களும் இ. ஏ. வி. சங்கத்தார்களும் முன்வரல் வேண்டும். உடும்பஞ்சோலை, வண்டமேட்டு, சாந்தம்பாரை முதலிய விடங்களில் அல்லது வசதியுள்ள வேறு இடங்களில் சந்தைகள் ஏற்படுத்தலாம். அறப்வேலிசரல் அதிகக் கூட்டம்.



## மின்சாரம்

### மைசூர் சமஸ்தானம்

கண்ணம்பாடி, சிவ சமுத்திரம் முதலிய விடங்களில் மின்சாரம் அதிகமாக உற்பத்தி செய்வதால், மைசூர், பங்களூர் முதலியவிடங்களைச் சுற்றி அருகாமையிலுள்ள கிராமங்களிலிருக்கும் கிணறுகளிலும், குளங்களிலுமிருந்து மின்சார வேகத்தின் மூலமாக நீர் இறைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது நன்றாயும் லாபகரமாயும் தோன்றினால் மைசூர் சமஸ்தானம் முற்றிலும் இவ்வித நூதன ஏற்பாடு பரப்பப்படும். இதனால ஏழை விவசாயிகள் இங்கு இன்புறுவர்களாக.

### செயற்கைச் சூரியன்

இலங்கைத் தீவானது தேயிலைத் தோட்டக்காரர் ராஜ்யமாகவேயிருக்கிறது. விவசாயத்திற்கு மழை எப்படித்தேவையோ அப்படியே தேயிலை உலர்த்துவதற்குச் சூரிய உஷ்ணம் தேவையாயிருக்கிறது. மழைக் காலங்களில் தேயிலையை உலர்த்த வழியின்றித் தோட்டக்காரர்கள் மகா கஷ்டப்படுவது வழக்கம். வானம்பார்த்த விவசாயிகள் போன்று இவர்கள் சூரியனைப்பார்ப்பார்கள். இக்கஷ்டத்தை ஒழிப்பதற்குப் பல சாஸ்திர எஞ்சினீயர்கள் செயற்கைச் சூரியன் ஒன்றைச்செய்து முடித்திருக்கிறார்கள். இச் சூரியன் 50-அடி நீளமும் 30-டன் கனமுமுள்ள ஒரு பெரிய இயந்திரம். இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கு இது இப்பொழுது இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. இயற்கையான சூரியன் 20-மணி நேரத்தில் தேயிலை உலர்த்துவதை இந்த செயற்கைச் சூரியன் அரைமணி நேரத்தில் உலர்த்துகின்றது. இதனால் இலங்கைத் தேயிலைத் தோட்டக்காரர்களின் ஒருவகைத் துன்பம் நீங்கியது.

வருங்கால உலகத்தில் மின்சாரமே எதற்கும் உபயோகப்படுத்தப்பட்டுத் தலைசிறந்து விளங்கும். எங்கும் மின்சாரம் எதற்கும் மின்சாரமாக ஆக்குவதற்கு ஆராய்ச்சிகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். மின்சார சூரியன் வந்துவிட்டது; மின்சார மனிதன் வந்துவிட்டான். இன்னும் 10-ஆண்டுகளில் இன்னும் என்னென்னமோ?

## காங்கிரஸ்

### தேசீயத் திருவிழா

வேற்று நாட்டார்கள் கல்வியாலும், செல்வத்தாலும், செல்வாக்காலும் உயர்ந்த நிலைமையில் இருப்பதைக்கண்டு, மற்ற நாடுகள் போன்று இந்தியாவும் சுதந்திரத்துடன் இருக்கவேண்டுமென்றும் மற்ற நாட்டார்களுக்குத் தலை குனியாது வாழவேண்டுமென்றும் நினைத்து, உத்தம தேசாபிமானிகளின் முயற்சியால் இந்தியன் நேஷனல் காங்கிரஸ் என்ற இந்தியதேச மகாசபை ஏற்றபட்டபின் நமது நாட்டில் சுதந்திர ஆவேசம் சிறுகச் சிறுகப் பொங்கியெழ ஆரம்பித்து, இப்பொழுது ஜாதி, மதம் வகுப்பு வித்தியாசமின்றி, இந்தியர்கள் அனைவரும் ஒன்று, ஒரு தாயாகிய இந்தியாவின் மக்கள் என்ற மேலான கொள்கையுடன் தேசவிடுதலைக்காக தேச மக்கள் பலர் பாடுபடுமிக்காலத்தில் சென்னை நகரில் காங்கிரஸ் என்னும் தேசியத் திருவிழா 1927-௵ டிசம்பர்௴ 26௳ தன் பொதுஜனத் தொண்டாலும், சர்வமத சகோதரத் தன்மையாலும் எல்லாவற்றிற்கும் உயர்ந்ததாக அவரின் அபார தேச பக்தியாலும் டாக்டர் அன்சாரி அவர்கள் அக்ராசனத்தில் அமர்ந்து, அடிமைவாழ்வில் ஆழ்ந்து அல்லலுறும் இந்தியர்களுக்கு சில்லரை மனஸ்தாபங்களாலும், மதப் பித்தாலும், உத்தியோக மோகத்தாலும் பிரிவினையடைந்து பலவீனமடைந்திருக்கும் இந்தியர்களுக்கு என்னதான் மார்க்கம் சொல்லப்போகிறாரோவென்று முதன்மையாக அகில இந்தியாவும் பொதுவாக உலகமுமே கவனித்து நின்றது.



தேசத்தின் ஒவ்வொரு விஷயத்தின் நிலைமையையும் எடுத்துக்காட்டி, சகோதர ஒற்றுமை, ஒற்றுமை என்று பிரசங்கித்து முடிக்கிறார். இவரது அக்ராசனப் பிரசங்கத்தில் ஆதியிலிருந்து அந்தம்வரைக்கும் ஒற்றுமையின் மணம் கமழ்கின்றது. ஹிந்து முஸ்லீம் வேற்றுமை பரவிவருமிக்காலத்தில இவரது அருமைப் பிரசங்கத்தை இந்தியர்களனைவரும் நன்றி வாசிப்பார்களாக. இந்தத் திருவிழாவைக் காணுவதற்குப் பரதகண்டத்தின் நாலு பக்கத்திலிருந்தும் பாரத மக்கள் வந்து பாரத மாதாவுக்கு வணக்கம் செலுத்தினார்கள். இவ்வாறு நம் தேசத்தில் பல்வேறு மதத்தினர்கள் பல்வேறு ஜாதியினர்கள், பல்வேறு கொள்கையினர்கள் ஒரு இடத்தில் ஒன்றுகூடி ஒரு உயிர்போன்று, ஒரே விஷயத்தைப் பேசுவதைக் கண்ணாரக்கண்டு காதாரக்கேட்ட எந்தவேறு நாட்டானும் இந்தியா சுயாட்சிக்கு அருகதையல்லவென்று ஒருக்காலும் கூறமாட்டான்.

இன்னும் இயற்கை வைத்திய மகாநாடு, சர்க்கார் உத்தியோகஸ்தர் மகாநாடு, கிலாபத் மகாநாடு, அகில இந்திய வாலிப மகாநாடு, அகில இந்திய சங்கீத மகாநாடு, பிர்ம ஞான சம்மேளனம், வன்னிய குல க்ஷத்திரியர் மகாநாடு, மாணவர் மகாநாடு, முஸ்லிம் கல்வி மகாநாடு, சுதேச சமஸ்தானப் பிரஜைகள் மகாநாடு, சமூக ஆசார சீர்திருத்த மகாநாடு, ஆஸ்திகர் மகாநாடு, சுதேச வர்த்தக மகாநாடு, முனிசிபல் இஞ்சினியர்கள் மகாநாடு, ஸ்திரீகள் மகாநாடு, வருணாச்சிரம தர்ம மகாநாடு, சாதுக்கள் மகாநாடு, ஸ்ரீ வைஷ்ணவர்கள் மகாநாடு, காருண்யர்கள் மகாநாடு, சென்னை ராஜதானியின் பதிவு இலாகா குமஸ்தாக்கள் மகாநாடு, ஐக்கிய இந்திய வர்த்தகர்கள் மகாநாடு, தொழிலற்றோர் மகாநாடு, அகில இந்திய ஸ்தல ஸ்தாபன மகாநாடு, ஆர்ய வைஸ்ய மகாநாடு, தேகாப்பியாச நிபுணர்கள் மகாநாடு, இந்திய கைத்தொழில் மகாநாடு, ஆரியர்கள் மகாநாடு, அகில இந்திய ஆர்ய வைஸ்யர்கள் மகாநாடு, தமிழ் பத்திராதிபர்கள் மகாநாடு, அகில இந்திரா

ரெயில்வே பிரயாணிகள் மகாநாடு, அகில இந்திய வாசகசாலை மகாநாடு, ஹிந்துஸ்தான் சேவாதள மகாநாடு, சென்னைக் கல்வி இலாகாவில் உயர்வு பெறாத உத்தியோகஸ்தர்கள் மகாநாடு, குருகுலக் கல்வி மகாநாடு, குடியாட்சி மகாநாடு முதலியன சென்னையில் காங்கிரஸ் வாரத்தில் நடைபெற்றன. கோவில் விழாக்களைக் காட்டிலும் தேசிய விழாக்களே இப்பொழுது ஜனங்களைக் கவர்ச்சிக்கின்றன.

---

## தாலுகாபோர்டு

### உத்தமபாளையம் தாலுகாபோர்டு

இதைப்பற்றி நமது ஏல விவசாயியில் விரிவாக எழுதப்பட்டது. போதாக் குறைக்கு உத்தமபாளையம் தாலுகாபோர்டு என்று தலைப்பிட்டு ஒரு துண்டுப் பிரசுரம் "ஏல விவசாயி" ப் பத்திரிகையின் ஆசிரியர் எழுதி 10,000 பிரதிகளை அச்சிட்டு வெளிப்படுத்தித் தாலுகாவெங்கும் பரப்பினார். இதைப்பற்றி பத்திரிகைகளும் எழுதின. 4–2–28உ அன்று கூடிய தாலுகாபோர்டுக் கூட்டத்தில் உசிலம்பட்டித் தாலுகா போர்டுப் பிரிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானமொன்று நிறைவேறியது.

இத் தீர்மானத்தைக் கொண்டுவந்த பிரசிடெண்டு ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள் வந்தனமளிக்கப் படுவாராக. இவர் இக்காரியம் இப்படிச்செய்ய முன்வந்து, கௌரவமாக நடந்துகொண்டது பாராட்டத் தக்கது. இப்போர்டுப் பிரிவினை விஷயமாக ஆதியிலிருந்து போராடிக்கொண்டு, இக் காரியத்தில் தாலுகாவெங்கும் நியாயமான முறையில் கிளர்ச்சிசெய்த மெம்பர் பணப்புரம் ஸ்ரீமான் T. B. கிருஷ்ணஸ்வாமிக் கவுண்டரவர்களுக்கும், மெம்பர் உத்தமபாளையம் ஜனாப் இப்ராஹிம் கோர்தால் கான் முகம்மது அவர்களுக்கும் இத்தாலுகா வாசிகள் மிக மிகக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.



தாலுகாபோர்டுப் பிரிவினைத் தீர்மானம் வரும்பொழுது, பெரியகுளம் வக்கீல் ஸ்ரீமான் சந்தான கிருஷ்ணநாயுடு அவர்கள் ஆதரவு அளிக்காதது வருந்தத்தக்கது. இவர் நன்கு வாசித்தவர், நன்கு தெரிந்துகொண்டவர். இவ் விஷயத்தில் தனிப் பிரயத்தனம் செய்யவேண்டிய இவர் மற்ற மெம்பர்களோடு ஒத்துழைக்காத காரணத்தைக் கண்டுகொள்ள முடியவில்லை. இங்கு தீர்ந்துபோன தீர்மானம் ஜில்லாபோர்டில் வரக்கூடுமென்று எதிர்பார்க்கிறபடியால், இவரும் ஏனைய ஜில்லாபோர்டு மெம்பர்களும் உத்தமபாளையம் தாலுகா வாசிகளின் குறைகளையறிந்து, அவர்களின் தீவிர உணர்ச்சிகளை மதித்து, இத் தாலுகாபோர்டு பிரிவினை விஷயத்தில் தக்கபடியெல்லாம் உதவிசெய்து, பிரிவினைத் தீர்மானத்தை அதி சீக்கிரத்தில் அமுலுக்குக் கொண்டுவருவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

## ராயல் கமிஷன்

மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தில் கூறியபடி இந்தியர்களுக்கு எவ்வாறு சீர்திருத்தம் கொடுக்கலாமென்பதை விசாரித்து, அறிந்துகொண்டு போவதற்காக பார்லிமெண்டால் ஸர். சைமனைத் தலைமையாகவும், லார்ட் பர்ன்ஹாம், மேஜர் அட்லி, கர்னல் லேன்பாக்ஸ், லார்ட் ஸ்டிராத் கோனா, மேஜர் கடோகன், ஸ்ரீ ஹார்ட்ஸ் ஹார்ன் ஆகிய அறுவர்களை அங்கத்தினராகக்கொண்டு அமைக்கப்பட்ட எழுவர்கூடிய சைமன் கமிஷன் இந்தியாவின் மண்ணில் பிப்ரவரி 3உ அன்று மிதித்தது. இக்கூட்டத்தில் ஒருவரேனும் இந்திய அங்கத்தினர் நியமிக்கப்படவில்லை. இந்தியரின் இஷ்டமில்லாது நியமிக்கப்பட்ட இக்கமிஷனைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று, கமிஷன் பம்பாய் வந்திறங்கிய 3உ அன்று இந்தியாவின் பலவிடங்களில் ஹர்த்தால் நடத்தி இந்தியாவின் துக்கத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள். நாடெங்கும் ராயல் கமிஷன் பகிஷ்காரப் பிரசாரம் தீவிரமாய் நடைபெறுகிறது. சென்னையில் 144-வது பிரிவு என்ற கவசத்தி பலம் பிரயோகிக்கப்படுகிறது. முடிவு எப்படியாகுமோ?

---

# ஆசிரியர் திரட்டுகள்

## ஏலம்

(1) ஏலம் லண்டனில் ராத்தல் 1-க்கு 3 ஷிலிங் முதல் 5 ஷிலிங்வரையில் சமயத்திற்குத் தக்கவாறு விற்கிறது. இப்பொழுது இலங்கையில் ஏலக்காய் ரூ 3—0—0 முதல் 3—4—0 வரை விற்கப்படுகிறது. ஒவ்வொரு ஏலக்காயிலும் 14 முதல் 17 விதைகள் இருக்கின்றன. ஒரு பவுனுக்கு ஏறக்குறைய 800 பச்சை ஏலக்காய்களிருக்கின்றன. 10 பவுன் பச்சை ஏலக்காயில் சுமார் 2½ பவுன் விதைகள் இருக்கின்றன. ஒரு பவுன் நிறைக்குக் கிட்டத்தட்ட 50,000 விதைகளிருக்கின்றன.

மகா யுத்தத்திற்கு முன்பு ஜெர்மனியில் ஏலம் அதிகமாகச் செலவானது. முக்கியமாக இப்பொழுது ஏலத்தை வாங்குகிற தேசம் அமெரிக்கா. இலங்கையிலிருந்து இப்பொழுது ஏலம் ஏற்றுமதி குறைந்திருக்கிறது. 1909இல் ரூ 797,818 விலையுள்ள 821,148 பவுன் ஏலக்காய் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் 1923இல் ரூ 563,995 மதிப்புள்ள 312,256 பவுன் ஏலம் ஏற்றுமதி செய்யப்பட்டது. இலங்கையில "காட்டு ஏலம்" இருக்கிறது. அந்த ஏலக்காயின் அதிகமான நீளம் 1½ அங்குலம்.

மாக்மில்லன்

---

(2) மலபார் ஏலமென்று (Malabar Cardamom) இங்கிலீஷ் வைத்தியப்புஸ்தகத்தில சொல்லப்படுவது [illegible] இதிலிருந்தே கிடைக்கிறது. இந்த வகை [illegible] வியாபாரத்தின் பொருட்டு ஏலக்காய்த் தைலம் இதிலிருந்து எடுக்கப்படுவதில்லை. ஆனால் இலங்கையில் பயிர் செய்யப்படுகிற அல்லது காடுகளில் தானாய் விளைகிற நீளமான ஏலக்காய்களிலிருந்து தைலம் இறக்கப்படுகின்றது. இந்த ஏலக்காய் திராவகம் வயிற்றுப் பொருமல் (Carminative) மருந்தாகவும், அமெரிக்கா, பிரான்ஸ் முதலான தேசங்களில் வாசனைத் திரவியங்களிலும் உபயோகப்படுத்தப்படுகிறது.



இந்திய வருஷாந்திர நூல்

---

(3) ஏலத்தில் இரு வகைகள் இருக்கின்றன:— (1) சிக்கிமிலும் பூடானிலும் மிகவும் பள்ளத்தாக்குகளில் உண்டாகின்றது. இந்த ஏலத்திற்கு பாரா ஏலச்சி அல்லது பெரிய ஏலம் என்று பெயர். (2) தென்னிந்தியா, மேற்கிந்தியா முதலிய இடங்களில் ஈரமான பூமியில் விளைகிற இந்த ஏலத்திற்கு சோட்டா ஏலச்சி அல்லது சிறிய ஏலம் என்று பெயர். இச்செடிகள் அடிக்கடி அழிந்து போகக் கூடியவைகளன்று. ஆண்டு தோறும் கிழங்குகள் வளர்ந்து கொண்டுவர அவைகளிலிருந்து புதிய செடிகள் உண்டாகின்றன. முற்றிய கிழங்குகளிலிருந்தே காய்க்கும் சரங்கள் உண்டாகின்றன. சிறிய ஜாதி ஏலத்தைக் கழுவி வெண்மையாக்கப்பட்ட பிறகே உலர்த்தப்படுகிறது. போக்ரா ஜில்லாவில் புதியதாகப் பயிரிடப்படுகிற பெரிய ஏலம் நல்ல பலனைக் கொடுத்திருக்கிறது.

விதைகளிலிருந்தோ, கிழங்குகளிலிருந்தோ ஏலச் செடியை உண்டாக்கலாம். நன்கு எருவிடப்பட்ட பாத்திகளும், தோட்டங்களும் இதற்குத் தேவை. செடிகளுக்கு சூரிய உஷ்ணத்திலிருந்து பாதுகாப்புத் தேவை. ஆனால் விதைகளுக்கும், நாற்றுகளுக்கும், வெயிலிலும் மழையிலும் பாதுகாப்பு வேண்டியிருக்கிறது. ஏலம் இருக்க வேண்டிய நிலம் வருஷமுழுவதும் ஈரமாயிருக்க வேண்டும். ஆனால் தண்ணீர் தங்கி நிற்கும் சதுப்பு

நிலமாயிருக்கக்கூடாது. சிக்கிம், பூடான் தேசங்களின் பள்ளத்தாக்குகளில் மலையின் சிற்றாறுகளுக்குச் சமீபத்தில் ஏலத்தோட்டங்கள் உண்டாக்கப்படுகின்றன. ஒடுக்கமான சிறிய கால்கள் வெட்டப்பட்டு தண்ணீர்கொண்டு வரப்படுகின்றன. இவைகளின் பக்கமாகப் போடப்பட்ட வரப்புகளில் (மேடுகளில்) ஏலச்செடிகள் பயிரிடப்படுகின்றன. இவ்வித ஏற்பாடானது தண்ணீரை ஓரேயிடத்தில் தங்கியிருக்கவிடாது, பூமியை எப்பொழுதும் ஈரமாகவே வைத்திருக்கிறது. தண்ணீர் பாய்ச்சுவதற்கு இலகுவாயிருக்கும் பொருட்டு பாக்குத் தோப்பின் நிழலை ஏலக் கிருஷிக்கு உபயோகப் படுத்தலாம். அக்டோபர் மீ உயர்த்தப்பட்ட வரப்புகளில் விதைகளை விதைக்கலாம். ஆறு, தண்ணீர் தங்குதல் இல்லாது, வரப்புகளின் இரு பக்கங்களிலும் சதா ஈரமிருக்கும்படியாகக் கோடை காலம் முற்றிலும் தண்ணீர் மெல்லென மத்தியில் ஓடிக்கொண்டிருக்கும் நீளமான தட்டையான வரப்புகளில் கிழங்குகள் (கிழங்கோடு கூடிய கட்டைகள்) பயிரிடலாம்.

நித்திய கோபால் முகர்ஜி.

---

குறிப்பு:— மேற்கண்ட விபரத்தைக் கொடிக்காலுக்கு ஒப்பிட்டுப் பார்த்தால் விஷயம் இலகுவில் விளங்கும்.

ஆசிரியர்.

---



# திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம்,

## தலைமைச் சங்க 4-வது நிருவாகக் கூட்டம்.

கம்பம், 15—12—1927.

---

### தீர்மானங்கள்.

1. கனம் பிரசிடெண்டவர்களும், வைஸ் பிரசிடெண்டவர்களும் ஆஜரில்லாததால் கனம் காமய கவுண்டன்பட்டி கிருஷ்ணசாமிக் கவுண்டரவர்களை அக்கிராசனம் வகிக்கவேண்டுமாய்க் காரியதரிசி அவர்களால் பிரரேபித்து, ஏகோபித்து அங்கீகரிக்கப்பட்டது.

2. தலைமை ஆபீஸின் ஆடி, ஆவணி, புரட்டாசி, அற்பசி மாதாந்திரக் கணக்கை வாசித்து அங்கீகரிக்கப்பட்டது.

3. தேவாரம் கிளை ஆபீஸ் ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, அற்பசி மீ த்திய கணக்குகளை வாசித்து அங்கீகரிக்கப்பட்டது.

4. கம்பம் கிளை ஆபீஸ் ஆடி, ஆவணி மீ த்திய கணக்குகளை வாசித்து அங்கீகாரம் செய்யப்பட்டது.

5. தலைமைச் சங்கம், கிளைச் சங்கம் மாதாந்திரக் கணக்குகளின் காப்பிகளைத் தலைமைச்சங்க நிர்வாக மெம்பர்களுக்கும் மீட்டிங் நோட்டீசுடன் அனுப்பிவைக்க வேண்டுமாய்த் தீர்மானிக்கலாயிற்று.

6. ஒவ்வொரு மாதத்திய முக்காலணாச் சந்தாவையும், மாதாந்திரக் கணக்குகளையும், ஒவ்வொரு கிளைச் சங்கங்களும் அடுத்தமீ 5உக்குள் தலைமை ஆபீசுக்கு அனுப்பிவைக்க வேண்டுமாய்த் தீர்மானிக்கலாயிற்று.

7. பொதுக் கூட்டம் செலவுக்காக போடிநாயக்கனூர் கிளைச் சங்கம் காரியதரிசி அவர்களால் செலுத்திய பொதுக் கூட்டம் செலவு போட்டிருக்கிற ரூ 1218—4—1யும் அங்கீகாரம் செய்யப்பட்டது.

8. பொதுக் கூட்டம் செலவுக்காக ஒவ்வொரு கிளைச் சங்கங்களும் செலுத்திவைக்க வேண்டிய ரூ 1000-ல் செலுத்தியது போக பாக்கி ரூபாயை 15-நாளைக்குள் செலுத்திவைக்க வேண்டுமாயும், தேவாரம் கிளைச் சங்கம் செலுத்தவேண்டிய தொகைக்கு, கிளைச் சங்கம், ராஜாக்கள் சங்கம், நாடார் க்ஷத்திரியர் சங்கம் 3-ம் செலுத்தி வைக்கவேண்டிய தொகைகளை வசூல்செய்து வருவித்தனுப்பும்படி கோம்பை கனம் காரியதரிசி அவர்களுக்கும், கோம்பை கனம் சுப்பய கவுண்டரவர்களுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டது.

9. திருவனந்தபுரம் வக்கீல் அவர்களின் லெட்டர் வாசிக்கப்பட்டது. அது விஷயமாய் நேரில்போய் அறிந்து தக்கவைகளைத் தெரிந்தெடுக்க கம்பம் கனம் சி. அ. ஆ. அனுமந்தக்குடி மீரா ராவுத்தரவர்கள் 1, கனம் நா. கோ திருமலையப்பபிள்ளை அவர்கள் 2, கனம் தேவர் அவர்கள் B. A., B. L. 3, கனம் S. V. சாமி, பார் அட்லா அவர்கள் 4 பேர்களுக்கு இக் கூட்டம் அதிகாரம் கொடுத்திருக்கிறது.

---

## திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கம்,

### தலைமைச்சங்க 5-வது நிர்வாகக் கூட்டம்

---

1927-ம் ஞு டிசம்பர் 25உ பிற்பகல் 3-மணிக்கு மதுரை மேலமாசிவீதியிலிருக்கிற போடிநாயக்கனூர் ஜமீன் பங்களாவில் கௌரவம் வாய்ந்த பிரசிடெண்டவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூடிய நிர்வாகக் கூட்டத்திய தீர்மானங்கள்.



ஆஜர் மெம்பர்கள் 24.

---

தீர்மானங்கள்:—

1. சங்கத்தின் தீர்மானங்களுக்கு விரோதமாகக் கம்பம் பண்ணைப்புரம், போடிநாயக்கனூர், ஏல விவசாயிகள் தங்கள் ஏலச்சரக்குகளை விற்றிருப்பதாகக் கோம்பை T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனியாரவர்களிடமிருந்து வரலான No. $\frac{3311}{58\text{-}12\text{-}27}$, $\frac{3314}{19\text{-}12\text{-}27}$, $\frac{3320, 3331}{20\text{-}12\text{-}27}$, $\frac{3354}{22\text{-}12\text{-}27}$ லெட்டர்கள் 1-ம் வாசிக்கப்பட்டது.

தீர்மானம்:— ஷை லெட்டர்களில் 2000 இரண்டாயிரம் ஏலம்சரக்கு விற்பனை செய்திருப்பதாகக் குறிப்பிடுவதில் விவரம் இல்லாததால் சரியான ஜாப்தா விவரத்தோடு ஒரு வாரத்துக்குள் அனுப்பிவைக்கும்படி ஷை கம்பெனியாரைக் கேட்டுக்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர்,**
**பிரசிடெண்டு.**

---

## வர்த்தமானக் குறிப்புகள்

தென் இந்தியா இருப்புப்பாதையில் அடியிற்கண்ட தேதிகளில் மேற்கண்ட லயன்கள் திறக்கப் படுமென்று தெரியவருகிறது:— பிச்சாண்டார் கோயில்-லால்குடி லயன் 1-2-28; திண்டுக்கல்-பொள்ளாச்சி லயன் 31-3-28; கூடலூர்-விருத்தாசலம் லயன் 31-3-28; மதுரை-போடிநாயக்கனூர் லயன் 30-6-28; விருத்தாசலம்—லால்குடி மெயின் லயன் 31-12-28; திண்டுக்கலிலிருந்து பழனிக்குச் செல்லும் இருப்புப்பாதையில் பழனி பங்குனி உத்திரத்திற்காக வண்டிகள் விடக்கூடுமென்று தெரிகிறது. பழனியில் எப்ரல் மீ 3உ பங்குனி உத்திர உற்சவம் நடைபெறும். அச்சமயம் மணியாச்சி ஜங்ஷன் வழியாகச் சென்று வரும் 5 நெ, 6 நெ. திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வண்டிகள் பிப்ரவரி மீ 1உ யிலிருந்து விருதுநகர் தென்காசி மெயின் லயன் வழியாகச் செல்லுகின்றது. மதுரையிலிருந்து செங்கோட்டைக்கும், செங்கோட்டையிலிருந்து மதுரைக்கும் புதிதாக ஒவ்வொரு வண்டித் தொடர் விடப்படும். இவை மணியாச்சி வழியாகச் செல்லும். மதுரையிலும் செங்கோட்டையிலும் 5-6 நெ. வண்டிகள் வந்ததும் இவை புறப்படும்.

சென்னை விதவா விவாக சபையின் காரியதரிசி அறிவிக்கிறார்:— அடியிற்கண்ட விதவைகளுக்குத் தகுதியான வரன்கள் வேண்டும்.

1. தமிழ்ப் பிராமண விதவை வயது 19
1. கன்னட பிராமண விதவை ,, 23
1. தெலுங்க பிராமண விதவை ,, 28
பி. ஏ., எல். டி.
2. தெலுங்க பிராமண விதவைகள் ,, 19
2. பிராமணரல்லாத விதவைகள்— 20.

உடனே எழுதுங்கள். காரியதரிசி விதவா விவாக சபை, 23, பிடாரியார் கோவில் தெரு, ஜி. டி. மதராஸ்.



மைசூரில் ஆதி திராவிட வகுப்பாருக்குப் பின்னும் உதவியளித்து அவர்களை முன்னேற்றுவதன் பொருட்டு மைசூர் சர்க்கார் ரெவினியூ கமிஷனரின் ஆலோசனையின்மீது இவ் வகுப்பைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் அவர்கள் ஏக்கர் விவசாயம் செய்யக்கூடுமாயின் குறைந்த விலைக்கு ஐந்து ஏக்கர் நிலங்கள் கொடுக்க அனுமதித்திருக்கின்றது. இதன் சம்பந்தமாக அந்நிலத்தை வாங்குபவர்கள் அதனைப் பதினைந்து வருடங்கள்வரை மற்றாருக்கும் விற்பனை செய்யக் கூடாதென்ற நிபந்தனையும் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

சென்னைப் பிரசிடென்சி மேஜிஸ்ட்ரேட் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி டாக்டர் வரதராஜுலு நாயுடு உள்ளிட்ட 21 காங்கிரஸ்காரர்கள் மீது 144-வது செக்ஷன் பாணத்தை உபயோகப்படுத்தியிருக்கிறார். இன்னும் ஒரு மாதம் வரையில் சைமன் கமிஷன் பகிஷ்கார சம்பந்தமாய் யாதொரு கூட்டம், ஊர்வலம், துண்டுப் பிரசுரம் முதலியவைகள் செய்யக்கூடாதென்பதே 144 ன் நோக்கம்.

இத்தலி நாட்டில் நிலங்களுக்குரியவர்கள் தங்கள் நிலங்கள் அனைத்தையும் பயிரிட வேண்டுமென்றும், அவ்வாறு பயிர் செய்யாமல் தரிசு கிடக்கும் நிலத்துக் குரியவர்களை நாட்டை விட்டு ஓட்டி விடுவதென்றும் மந்திரி முசோலினி ஒரு புதிய உத்தரவு போட்டிருக்கிறாராம். ப்ளோரன்ஸ் வாசியான ஒரு செல்வர் மீது ஒரு சோதனை வழக்கு ஏற்பட்டிருக்கிறது.

உலகத்தில் மிளகுப் பஞ்சம் ஏற்படுமோ வென்று பயப்பட வேண்டியிருக்கிறது. பிரிட்டன் மாத்திரம் வருஷத்திற்கு 5,000 டன் மிளகு வாங்குகிறது. இவ்வாறு இதில் ஏற்பட்டிருப்பதற்கு முக்கிய காரணம் ஜாவாவிலுள்ள தோட்டக்காரர்கள் மிளகுக்குப் பதிலாக ரப்பரை பயிரிட முயன்று வருவதுதான்.

உலகத்தில் உபயோகிக்கப்படும் தேயிலையில் மூன்றில் ஒரு பங்கும், அரிசியில் முக்கால் பங்கும், பருத்தியில் ஐந்தில் ஒரு பங்கும் இந்தியாவின் விளை பொருட்களாகும்.

15961)

தூத்துக்குடி நகரபரிபாலன சபையில் இனி நிகழ்த்தப்படும் நடவடிக்கைகளெல்லாம் தமிழ்ப் பாஷையிலேயே நடத்தப்பட வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்களாம்.

முதன் முதல் பிரான்சு தேசத்தின் தலை நகரில் 1462 (ம் வருஷ)த்திலும், இங்கிலாந்தில் 1581 வருஷத்திலும், அமெரிக்காவில் 17(..) வருஷத்திலும் தபாலாபீஸ்கள் திறக்கப்பட்டனவாம்.

மகாத்மா காந்தி சுகமுற்று வருகிறார். மார்ச்சு 12உ அவருக்கு 6 வருடம் சிறை தண்டனை விதித்த இறுதி நாளாம். அந்நாள் அவருக்கு கொடுமையான நாளென்று மகாத்மா மேஜரியங் கூறுகிறாராம்.

ஹைதராபாத்தில் பிளேக் நோய் மிகக் கடுமையாகப் பாவி கொடுமை செய்கிறது. அந்த வதிந்தோர் பலர் வெளியேறிவிட்டதால் ஹைதராபாத் காலியாகவே தோன்றுகிறதாம். நிஜாம் அரசர் நேராகச் சென்று நோயாளிகளைப் பார்த்து வருகிறாராம்.

கொள்ளிடம் நதியின் தென் பாகத்தில் மெஸ்ஸர்ஸ் ப்ரெயித் வெயிட் கம்பெனியாரால் 14 லட்ச ரூபா செலவில் கட்டப்பட்ட புதிய பாலத்தை சென்ற 9உ சென்னை அரசாங்க நிர்வாக சபை அங்கத்தவர் திரு மாயர் திறந்து வைத்தார் இப் பாலம் 1200 கஜ நீளமுடையதாயும் 14 கண்கள் உள்ளதாயு மிருக்கிறதாம். சென்னை மாகாணத்தில் இதுதான் பெரிய பாலமென்று கூறப்படுகிறது.

புது தில்லியில் அகில இந்திய மாதர் மகாநாடு கூடி முடிந்தது. மகாநாட்டுக்கு இராஜப் பிரதிநிதியாரின் மனைவியும் வந்திருந்தார். பெண்களுக்குக் கட்டாயக் கல்வி ஏற்படுத்த வேண்டியது அவசியமெனவும் கோஷா முறையால் துன்புறும் முஸ்லிம் பெண்களும் கல்வி கற்கும்படி விசேட ஏற்பாடுகள் புரியவேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்வதாயும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. பொது நிதி வசூலிப்பதாகவும் முடிவு செய்யப்பட்டது. இதுவரை 30,000 ரூபா வசூலாயிற்று. போபால் பேகம் மட்டும் 5,000 ரூபா கொடுத்தார்.

---